23rd JUNE 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 36 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



# பலஸ்தீன் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும்

## பலஸ்தீன் அரசு உருவாக்கப்பட வேண்டும்

### காத்தான்குடி அல் அக்ஸா நிகழ்வில் ஜனாதிபதி கருத்து





(பஹ்ரட் எம். ஜுனைட்)

காஸா விவகாரத்தில் இலங்கையின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது.
பாலஸ்தீன அரசு 5 வருடங்களுக்குள் நிறுவப்பட

02ம் பக்கம்பார்க்க...

# ஹாஜிகளுக்கு சிறந்த பலன் தரும் சவூதியின் புதிய டிஜிட்டல் திட்டம்

## சவூதிக்கான தூதுவர் அமீர் அஜ்வத்!

(ஏ.எச்.எம். பூமுதீன்)

ஹஜ் சேவைகளை வழங்குவதில் சவூதி அரேபியாவின் புதிய டிஜிட்டல் உட் கட்டமைப்பு ஹாஜிகளுக்கு

03ம் பக்கம்பார்க்க...

# மக்கள் போராட்டத்தால் முடங்கியது டெல்அவீவ் இலட்சக்கணக்கில் வீதிகளில் போராட்டம்

## அரசை பதவி விலகுமாறு வலியுறுத்து

ஹமாஸின் பிடியிலுள்ள பணயக் கைதிகளை மீட்குமாறு கோரியும்,நெதன்யாகு அரசை பதவி விலகுமாறு வலியுறுத்தியும் டெல்அவீவில் நேற்று சனிக்கிழமை முதல் அந் நாட்டின் இலட்சக்கணக்கான மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதன் காரணமாக தலைநகரான டெல்அவீவின் இயல்பு


03ம் பக்கம்பார்க்க...

# பேராளர் மாநாட்டில் அமைதியின்மை விசாரணை அறிக்கை கோரும் ஹக்கீம்

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சியின் 31வது பேராளர் மாநாடு 2024.06.22ஆந் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இம்மாநாட்டில் சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்த

02ம் பக்கம்பார்க்க...




# மு.கா.தலைவராக மீண்டும் ஹக்கீம்

## 7 உப தலைவர்கள் நியமனம்




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31 ஆவது பேராளர் மாநாடு நேற்று (22) காத்தான்குடியில் நடைபெற்ற போதே இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

கட்சியின் பதவி நிலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பெயர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்டன.

கட்சியின் தலைவராக ரவூப் ஹக்கீமும் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அலிசாஹிர்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில் வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## பலஸ்தீன்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பதுடன் பொதுமக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக்கெ முடியாது.இந் நிலையில் வங்குரோத்து அடைந்த சிறிய நாடாக இருந்தும், இலங்கை காஸாவுக்கு ஆதரவு வழங்கியது.

காஸா பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது எனவும், 5 வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விகிரமசிங்க தெரிவித்தார்.

காஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காத்தான்குடி பெரிய ஜு/ம்மா பள்ளிவாசலில் இன்று (23) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பிரார்த்தனையில் கலந்துகொண்டதன் பின்னர் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மௌலவி ஹாரித்தினால் பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு (ஊாடைனசநெ ழக புயணய குரனெ) காத்தான்குடி பெரிய ஜு/ம்மா பள்ளிவாசல், 10,769,417 ரூபாயை நன்கொடையாக வழங்கியது. பிரார்த்தனையின் பின்னர், காஸா நிதியத்திற்கான காசோலை பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விசேட பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஜனாதிபதி, அங்கு வருகைத் தந்திருந்தவர்களோடு சிநேகபூர்வமாக கலந்துரையாடியதோடு, செல்பி புகைப்படங்களிலும் இணைந்துகொண்டார்.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

”நான் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருக்கும் வேளையில், இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. இந்த பள்ளிவாசல் முஸ்லிம் கலைக்கு சிறந்த உதாரணமாகக் விளங்குகிறது. காத்தான்குடி முஸ்லிம்கள் அரசர் காலத்திலிருந்து அங்கு வாழ்ந்து வந்த ஒரு பிரிவினர். மட்டக்களப்பின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இங்கு வந்தேன். இந்த மாகாணத்தில் விவசாயத்தை நவீனமயமாக்குவதுடன் சுற்றுலாவை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம். அதேபோல், கல்வியையும் மேம்படுத்த வேண்டும்.

காஸா நிதியத்திற்கு உங்கள் ஆதரவை வழங்குவதற்காக இன்று எனக்கு இங்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. காஸா விவகாரத்தில் அரசாங்கம் வலுவான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. அது என்றும் மாறாது. ஹமாஸ/க்கும் இஸ்ரேலுக்கும் பிரச்சனைகள் இருக்கலாம். அதற்காக, காஸா மக்களை பழிவாங்க வேண்டாம்.

பாலஸ்தீனம் தீர்வை எட்ட உதவ வேண்டும். 5 வருடங்களுக்குள் பலஸ்தீன அரசை நிறுவ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். காலக்கெடு இல்லாமல் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனென்றால், 40, 50 வருடங்களாக இது குறித்து பேசப்பட்டது. எனவே, காலக்கெடுவின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இஸ்ரேலின் பாதுகாப்பு பிரச்சினை இருந்தால் அது குறித்துத் தனியாக விவாதிக்கலாம். ஆனால் பாலஸ்தீன அரசு உருவாக்கப்பட வேண்டும். ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அதிருப்தி அடைந்திருக்கிறோம். அதை நாம் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

காஸா போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக காஸா நிதியத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி முதலில் ஒரு மில்லியன் டொலரை வழங்க ஏற்பாடு செய்தோம். நாம் சிறிய நாடாக இருந்தாலும், வங்குரோத்து நிலையை அறிவித்திருக்கும் வேளையிலும் ஒரு மில்லியன் டொலரை வழங்க முன்வந்திருக்கிறோம். இதற்கு பொது மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். எனவே இந்த நன்கொடைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் உடல்களை அடக்கம் செய்வது குறித்த பிரச்சினைகளை முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அது குறித்து ஆராய உலக சுகாதார அமைப்பின் திட்டத்தை செயல்படுத்தாமல் தனி குழு நியமிக்கப்பட்டது. இதனால் முஸ்லிம் மக்கள் மனம் நொந்துள்ளனர்.

எனவே, உடலை அடக்கம் அல்லது தகனம் செய்தல் அல்லது உடலை விரும்பினால் மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கலாம் என்ற புதிய சட்டத்தை கொண்டு வரத் தீர்மானித்திருக்கிறோம். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது.

நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நான் முன்னுரிமை அளித்துள்ளேன். அந்த இலக்கை மிகக் குறுகிய காலத்தில் அடையலாம். அதன்பிறகு, நாட்டின் மற்றைய பிரச்னைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்படும். அத்துடன், மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்கும் வகையில் உறுமய வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.”

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, அலி சாஹிர் மௌலானா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏம். எம்.ஹிஸ்புல்லாஹ், புதிய காத்தான்குடி பெரிய ஜு/ம்மா பள்ளிவாசல் தலைவர் கே.எல்.எம்.பரீத், மௌளவி இல்ஹாம், முன்னாள் மட்டக்களப்பு மேயர் ஏ.எச்.எம்.அஸ்பர், காத்தான்குடி பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.தௌபீக்,




## மு.கா...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மௌலானா, எச்.எம்.எம். ஹரிஸ், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட 7 பேர் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேராளர்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பு தொடர்பில் உடனடியாக விசாணைகளை ஆரம்பித்து, அது தொடர்பான அறிக்கையினை ஒரு வாரகாலத்திற்குள் சமர்ப்பிக்குமாறும் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றவுப் ஹக்கீம் பணித்துள்ளதாக கட்சியின் அம்பாரை மாவட்ட செயற்குழுவின் செயலாளரும், உயர்பீட உறுப்பினருமான ஏ.சி. சமால்டீன் தெரிவித்தார்.

குறித்த விசாரணையை மேற்கொள்வதற்காக கட்சித் தலைவரினால் கட்சியின் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தலைமையில் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் ,கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் கட்சியின் பிரதி தலைவருமான கலாநிதி ஹிஸ்புல்லா, ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் உயர் பீடத்திற்கு அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவு பிறப்பித்ததாகவும் தெரிவித்துள்ளார்.



## மக்கள்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை முற்றாக முடங்கியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் படையினரால் பிணைக் கைதிகளாக காஸாவுக்குப் பிடித்துச் செல்லப்பட்டுள்ள இஸ்ரேல் குடிமக்களை மீட்கக்கோரி இஸ்ரேலில் நேற்று (ஜூன் 22) போராட்டம் வெடித்தது.

இஸ்ரேலை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் காஸாவில் பிணைக் கைதிகளாக இருப்பதாக கூறப்படும் நிலையில், டெல் அவிவ் நகர வீதிகளில் திரண்ட ஏராளமான மக்கள், அந்நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான அரசை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போர் நிறுத்தம் ஏற்பட்டால் பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ள மக்களை திருப்பி அனுப்புவதாக ஹமாஸ் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ள நிலையில், காஸாவில் இஸ்ரேல் அரசு இராணுவம் மூலம் ஹமாஸ் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், கைகளில் இஸ்ரேல் கொடிகளை ஏந்தியபடி போராட்டத்தில் ஈடுபட்ட லட்சக்கணக்கானோர் நெதன்யாகுவுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியதையும், அரசை கலைத்துவிட்டு தேர்தல் நடத்தக்கோரியும் முழக்கங்களை எழுப்பியதையும் காண முடிந்தது.

சுமார் ஒன்றரை லட்சம் பேர் சனிக்கிழமையன்று போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிய வந்துள்ளது. போராட்டக்காரர்கள் சிலர் சாலைகளை ஆக்கிரமித்து, டயர்களைக் கொளுத்தியதால் பதற்றமான சூழல் நிலவியது. லட்சக்கணக்கானோர் திரண்டதால் காவல்துறையினர் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த திணறியதையும் காண முடிந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி காஸா மீதான போர் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலில் அரசை கண்டித்து போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், இத்தனை லட்சம் மக்கள் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறை என்று சொல்லப்படுகிறது.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இல்லத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டதையும் காண முடிந்தது. காஸ ாவுக்கு பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டோரின் குடும்பத்தினரும் உறவினர்களும் சனிக்கிழமை நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றனர்.

டெல் அவிவ் நகரில் நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் பங்கேற்ற பலர் சாலைகளில் புரண்டு அரசுக்கு எதிராக எதிர்ப்பைப் பதிவு செய்ததையும் காண முடிந்தது. நெதன்யாகு தலைமையில் இஸ்ரேலில் ஜனநாயகம் செத்து மடிந்துவிட்டதாகப் போராட்டக்காரர்கள் கூறினர்.

## ஹாஜிகளுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த பயன்மிக்கது என சவூதிக்கான - இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு "நுசுக்" எனும் இனணயத்தளம் இலகுவான மிகச் சிறந்த சேவையை வழங்குகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சவூதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு ஏற்பாடு செய்திருந்த "கிதாமுஹூ மிஸ்க்" 2024 ஹஜ் நிறைவு விழாவில் கலந்து கொண்டு - சவூதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர் அமீர் அஜ்வத் சிறப்புரையாற்றும் போதே மேற்படி கருத்தை முன்வைத்தார்.

2024 - ஹஜ் வெற்றிகரமாக நிறைவுற்றதைக் கொண்டாடும் வகையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஹஜ் யாத்திரிகர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு "விருதுகள்" வழங்கப்பட்டன.

2025 - ஹஜ் காலத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மற்றும் கால அட்டவணையை ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சர் தௌபீக் அல்-ரபியா அறிவித்தார்.

உம்ரா மற்றும் ஹஜ் செய்வோருக்கான சேவைகளை மேம்படுத்த "நுசுக் மசார்" என்ற புதிய தளத்தையும் அவர் அறிமுகப்படுத்தினார்.

இத்தளம் ஹஜ் யாத்திரிகர்களுக்கு சேவை செய்யும் அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து திறமையான அனுபவத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிறந்த திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீட்டிற்கு உதவும் வகையில் முன்கூட்டியே யாத்திரை ஒதுக்கீடுகளை வழங்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றிய ஆவணமும் இங்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது மேலும் கருத்துத் தெரிவித்த சவூதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர் அமீர் அஜ்வத் - இரண்டு புனித தளங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகம்து பின் சல்மான் ஆகியோருக்கு ஹஜ் யாத்திரிகர்களுக்கு சிறந்தசேவைகளை வழங்கியமைக்காக இலங்கை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

"நுசுக்" எனும் இனணயதளம் இலகுவான மிகச் சிறந்த சேவையை வழங்குகிறது.

இது சவூதி அரேபியாவின் - 2030 இலக்குகளுடன் இணைந்து செல்லும் ஒரு புரட்சிகர டிஜிட்டல் பரிமாற்றம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை ஹஜ் குழுவின் தலைவர் இப்ராஹிம் அன்சார் மற்றும் ஹஜ் குழு உறுப்பினர்களான இபாஸ் நபுஹான், நிப்ராஸ் நசீர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும். அவ்வாறு தேவையுடையோர் 070 239 7210 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JUNE 23 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அகவை 70இல் இலங்கை ஜமாத்தே இஸ்லாமி

இலங்கை வாழ் முஸ்லிம்களது ஆத்மீக வளர்ச்சியில் இஸ்லாமிய இயக்கங்கள் ஆற்றி வரும் பங்களிப்புகள் அளப்பரியது. சுதந்திரத்திற்கு பின் இலங்கை வாழ் முஸ்லிம்களின் இஸ்லாம் பற்றிய தெளிவான அறிவை வழங்குவதில் பிரதான ஆத்மீக இயக்கங்கள் ஒன்றுக்கொன்று குறையாத பங்களிப்பினை செய்துள்ளது. அகவை 70ல் கால் பதித்துள்ள இலங்கை ஜமாஅத்தை இஸ்லாமியின் பயணத்தை பின்னோக்கிப் பார்க்கும்போது நாட்டு முஸ்லிம்களுக்கு சரியான இஸ்லாமிய வழிகாட்டல்களையும், தெளிவினை வழங்குவதனையும் ஒரு சிறப்பான பங்களிப்பினை செய்துள்ளதனை எவராலும் மறுக்க முடியாது. ஜமாஅத்தே இஸ்லாமியின் ஏழு தசாப்த பயணத்தில் பல்வேறு விதமான சவால்களை எதிர்கொண்டு இன்று சகல சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு அமைப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.

குறிப்பாக நாட்டின் ஏனைய இனங்களுக்கு மத்தியில் முஸ்லிம்களை பற்றியும் இஸ்லாம் பற்றியும் நிலவும் தப்பபிப்பிராயங்களைபோக்குவதில்ஒருசிறப்பானபங்களிப்பினை ஜமாத்தே இஸ்லாமி செய்து வருகின்றது. விரிவுரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் அதன் வெளியீடுகள் ஊடாக இந்தப் பணிகளை சிறப்பாக செய்துள்ளது, செய்தும் வருகின்றது.

ஜமாத்தே இஸ்லாமி சமூக மேம்பாட்டுக்காக முன்வைக்கும் திட்டங்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதவரையும் கவர்வதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பல்லின மக்கள் வாழும் இலங்கையில் சமூகங்களுடைய நல்லிணக்கம், பரஸ்பரம், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தையும் வளர்ப்பதில் இந்த அமைப்பு ஆற்றி வரும் பங்களிப்பினை விசேடமாக குறிப்பிட முடியும். முஸ்லிம் சமூகம் முழுமையாக நிராகரித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் இந்த அமைப்பு சில பின்னடைவுகளை எதிர்நோக்கியபோதும் தமது செயல்பாடுகளை இன்று அந்த நிலையில் இருந்து மீட்சி பெற்று அதன் வழமையான பயணத்தில் பயணிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த தெளிவை நாட்டுக்கு வழங்குவதற்கு ஜமாஅத்தின் தலைவர்களும் தொண்டர்களும் ஆற்றிய பங்களிப்பு பாராட்டுக்குரியது. சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், அரசியல் என்பன மேம்பட வேண்டும் என்ற சிந்தனையை ஜமாஅத்தே இஸ்லாமி முன்வைத்துள்ளது. அதற்கான செயற்திட்டங்களையும் முன்வைத்து செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரிய வழியாகும். முஸ்லிம் சமூகத்தின் கட்டுப்பாட்டில் ஊடகங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஐந்தாறு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஊடகங்களை வெளியிட்டு சமூகத்தின் ஊடகத்தாகத்தை நிவர்த்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றது. துரதிஷ்டவசமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் அதன் பல வெளியீடுகள் இடைநிறுத்தப்பட வேண்டி ஏற்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி மட்டுமின்றி நாட்டின் பல தசாப்தங்களாக வெளியான ஊடகங்கள் கூட இடைநிறுத்தப்பட்டது சமூகத்தின் துரதிஷ்டமே. நாட்டுக்கும் சமூகத்துக்கும் பல பணிகளை சிறப்பாக செய்து வரும் இந்த ஜமாஅத்தே இஸ்லாமி அதன் அகவை 70இனை முன்னிட்டு எதிர்வரும் 21ஆம் திகதி அதன் அங்கத்துவ மகாநாட்டை பண்டாரநாயக்க சர்வதேச மகாநட்டு மண்டபத்தில் சிறப்பாக நடத்த உள்ளது.

1500க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் மற்றும் 600க்கும் மேற்பட்ட பிரமுகர்களுடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இந்த மாநாடு நாட்டுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ளதாக அமையப் பிரார்த்திப்போமாக.




## "ரீ20 பரிசு மழையுடன் உதயம்"

அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகியுள்ள ரீ20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளையொட்டி உதயத்தின் மாபெரும் பரிசுப் போட்டி.

இப் போட்டிக்கான கேள்விகளை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எமது இணையதளம் மற்றும் பத்திரிகை ஊடாக அறிய முடியும்.

பெறுமதியான பரிசில்களைக் கொண்ட இப் போட்டியில் வயது வித்தியாசமின்றி அனைவரும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

***போட்டி விதிமுறைகள்:***

- 10 கேள்விகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாக்களும் உதயம் இணையதளம், வட்ஸ்அப் குழுமங்களூடாக பிரசுரிக்கப்படும்.
- இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வினா பிரசுரிக்கப்படும். (மொத்தமாக வினாக்கள் முடிவடையும் திகதி 23.06.2024)
- பங்குபற்றும் போட்டியாளர்கள் 10 கேள்விகளையும் ஒன்றாக சேர்த்து A4 தாளில் கேள்விகளையும், விடைகளையும் எழுதி அதனை தெளிவாக Scan செய்து ஒரே தடவையில் கீழுள்ள வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
- ஒரு போட்டியாளரின் விண்ணப்பம் ஒரு தடவை மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.
- போட்டியாளர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை விடையனுப்பும் அதே தாளில் எழுதியும், வட்சப் இல் டைப் செய்தும் அனுப்ப வேண்டும்.
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
- விடை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: ஜூன் 25 - 27 ஆம் திகதிகளுக்கிடையில் அனுப்பி வைக்கவும்.

விடையனுப்ப வேண்டிய வட்ஸ்அப் இலக்கம்: 071 341 6350

மேலதிக விபரங்களுக்கு உதயம் விளையாட்டு செய்திப் பிரிவு:
077 87 51 032

### போட்டிக்கான வினாக்கள்

6. தொடரில் அதிக நான்கு ஓட்டங்களை அடிக்கும் துடுப்பாட்ட வீரர் யார்?
7. அதிக சதங்களை விளாசும் துடுப்பாட்ட வீரர் யார்?
8. அதிக அரைச் சதம் அடிக்கும் துடுப்பாட்ட வீரர் யார்?
9. 5 விக்கெட்டுகளை வீழ்த்தப்போகும் பந்துவீச்சாளர் யார்?
10. ஹெட்ரிக் சாதனை படைக்கும் பந்துவீச்சாளர் யார்?

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்



# பறவைக் காய்ச்சலுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்கினப் பொருட்கள் இறக்குமதிக்கு தடை



பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் அல்லது விலங்கினப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதியில்லை என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல நாடுகளில் மீண்டும் தலைதூக்கியுள்ள பறவைக் காய்ச்சல் நோய்க்கிருமி நுண்ணுயிர் நுளம்பு உள்நுழைவதைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

எனவே, இது குறித்து தேவையில்லாத அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் எனவும் அவர் மேலும் கோரியுள்ளார்.

# கற்பிட்டி அல் அக்ஸாவில் ஹஜ் பெருநாள் கவியரங்கு





கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஹஜ்ஜுப் பெருநாளை சிறப்பிக்கும் முகமாக வெள்ளியன்று (21) கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் ஹஜ் பெருநாள் கவியரங்கு தம்பி மரைக்கார் அரங்கில் அதிபர் எஸ்.எம் அறூஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கவியரங்கில் 8 கவிஞர்கள் கவி பாடினார்கள். எச்.எம். சுஜப் (கவிப்புயல்), எஸ்.எச்.எம் நவ்பர், ஜீ.குணசேகரன், எஸ். சுப்ரமணியம், எம்.எம்.எம். ரவூப், பாத்திமா பர்வின் எம்.ரீ.றிபாஸ் மௌலவி, எம். கேஷினி மோகனதாஸ் ஆகியோர்கள் மேடையில் கவிதைகள் அழகாக பாடினார்கள்.

இதில் விசேஷம் அம்சம் என்னவென்றால் மூன்று தமிழ் இனக் கவிஞர்கள் பெருநாள் கவிதையில் நபி இப்ராஹீம், இஸ்மாயில் போன்ற வரலாறுகளை கவிகளை பாடினார்கள்.

இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரனை வழங்கியிருந்தது. சிரேஸ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் மற்றும் அஷ்ரப் ஏ சமத் ஆகியோர்களுடன் அல் அக்ஸா பாடசாலை உப அதிபர்,ஆசிரியர்கள் இலக்கியவாதிகள் கலந்து சிறப்பித்தனர்.

# உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு -2024



(இஸட்.ஏ.றஹ்மான்)

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் தென்கிழக்குப் பிரதேசத்தில் இவ்வருடம் இடம் பெறவுள்ள உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பான திட்டமிடல் கூட்டமும் குழு அமைத்தலும் தலைமத்துவ வழிகாட்டலும் 2024.06. 22ம் திகதி காலை 9 முதல் 3மணி வரை ஒலுவில் பரண் தோட்டத்தில் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் கலைஞர் ஏ.எல். அன்சார் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த இனிய நிகழ்வில், கவிஞர்கள், இலக்கிய வாதிகள், கல்வியலாளர்கள் கலந்து கொண்டு ஆரோக்கியமான கருத்துக்களை தெரிவித்ததுடன் விழாவின் வெற்றிக்காக தங்களின் ஒத்துழைப்பினையும் வழங்குவதாக உறுதியளித்தனர்.

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....



## பாக்கியத்துக்கு உரியோரின் செயல்கள்!

தாங்கள் செய்த (நற்)செயல்களின் பலனை இம்மையிலும், மறுமையிலும் அடையும்) பாக்கியம் இவர்களுக்குத் தான் உண்டு. தவிர (சிரமமேற்படாத வண்ணம். இவர்களின் செயல்களைப் பற்றி மறுமையில்) அல்லாஹ் வெகுவிரைவாகக் (கேள்வி) கணக்கெடுப்பான் அவனுக்கு அது சிரமமன்று) (2:202)

அல்லாஹ்வின் பொருத்தம் பெற -

அல்லாஹ்வின் (திருப்) பொருத்தத்தை பெறுவதற்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்யக் கூடியவர்களும் மனிதர்களில் உண்டு. அல்லாஹ் (இத்தகைய) அடியாரின் மீது மிகவும் கருணையுடையவன். (2:207)

நம்பிக்கையாளர்களே! நீங்கள் (தயங்கிக்கொண்டிருக்க வேண்டாம்) இஸ்லாமில் முற்றியும் நுழைந்து விடுங்கள். (இதனைத் தடை செய்யும்) ஷைத்தானின் அடிச் சுவடுகளைப் பின்பற்றாதீர்கள் நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான எதிரியாவான். (2:208)

இஸ்லாத்திலிருந்து நழுவி விடல்:

(மனிதர்களே! சந்தேகத்திற்கு இடமில்லாத) தெளிவான அத்தாட்சிகள் உங்களிடம் வந்த பின்னும் நீங்கள் (இஸ்லாமில் உறுதியாக இல்லாமல்) நழுவி விடுவீர்களானால் (உங்களைக் கண்டிப்பதில் நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும் (உங்களை எவ்விதம் நடத்த வேண்டும் என்பதை நன்கறிந்த) நுண்ணறிவுடையவனுமாக இருக்கிறான் என்பதை நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். (2:203)

கஷ்டமான நிலை வராமலே சுவர்க்கம்:

(நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்டது போன்ற கஷ்டமான) நிலைமை உங்களுக்கு வராமலே நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாமென நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? (உங்களைப் போல்) நம்பிக்கை கொண்ட அவர்களையும் அவர்களுடைய தூதரையும் வாட்டும் வறுமையிலும், நோயிலும் பீடித்து (அவர்கள் வருந்தித் தங்களுடைய கஷ்டங்களை நீக்கி) அல்லாஹ்வுடைய உதவி எப்பொழுது (வரும்? எப்பொழுது வரும்?) என்று கேட்டதற்கு "அல்லாஹ்வுடைய உதவி நிச்சயமாக (இதோ) சமீபத்திலிருக்கிறது" என்று (நாம் ஆறுதல்) கூறும் வரையில் அவர்கள் ஆட்டிவைக்கப்பட்டார்கள் (2:214)

யாருக்கு செலவு செய்ய வேண்டும்..?

(நபியே! பொருள்களில்) எதைச் செலவு செய்வது? (யாருக்கு கொடுப்பது ?) என்று உங்களிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீங்கள் கூறுங்கள் நன்மையைக் கருதி) நீங்கள் எத்தகைய பொருளைச் செலவு செய்த போதிலும் (அதனைக்) தாய், தந்தை, சுற்றத்தார், அநாதைகள், ஏழைகள் வழிப்போக்கர்கள் ஆகியோருக்குக் கொடுங்கள். இன்னும் நீங்கள் (வேறு) என்ன நன்மையைச் செய்தபோதிலும் அதனையும் நிச்சயமாக அல்லாஹ் அறி(ந்து அதற்குரிய கூலியையும் தரு)வான்.(2: 215)

தொகுப்பு:- இப்னு தவ்பீக் ஆலிம்.

# காலஞ்சென்ற இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் எஸ். எம். பாக்கருக்கு இரங்கல்



இந்திய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் எஸ். எம். பாக்கர் அவர்கள் சென்னை வடபழனி சிம்ஸ் மருத்துவமனையில் சில நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் உடல் நிலை மோசமாக இருந்த நிலையில் 20.06.2024 வியாழக்கிழமை இரவு 8.30 மணி அளவில் உடல் நலக்குறைவால் காலமானார்.

இந்த செய்தியை அறிந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, மாநில செயலாளர் கே. எம். நிஜாமுதீன், ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியும் அவருடைய மகாபிருந்துக்காவும் து ஆ செய்வதாக கூறினார்கள்.

இவருடைய ஜனாஸா சென்னை அண்ணாசாலையில் உள்ள மக்கா பள்ளிவிசலில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவருடைய மறைவிற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் செல்வபெருந்தகை, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், அமுமுக பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், வி.கே. சசிகலா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாநில முதன்மை துணைத் தலைவரும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மனித நேயம் கட்சி தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப. அப்துல் சமது, ஆளூர் ஷாநவாஸ், எஸ்டிபிஐ தலைவர் நெல்லை முபராக், மனித நேயம் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தமீமுல் அன்சாரி, அப்போலோ அனீபா உள்ளிட்டோர்கள் இரங்கல் தெரிவித்தார்கள்.

சென்னை புதுக்கல்லூரியில் வெள்ளிக்கிழமை அஸர் தொழுகைக்கு பிறகு ஜானஸா தொழுகை நடத்தப்பட்டு ராயப்பேட்டையில் உள்ள அமீருன்னிஷா மஸ்ஜித் கப்ருதானில் நல்லடக்கம் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். பின்னர் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. பின்னர் அவருக்காகச் சிறப்பு து ஆ செய்யப்பட்டது.

# அம்பாறை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு பணியக ஊடக மன்றம்

**- நிகழ்வின் பிரதம அதிதி அமைச்சர் மனுச நாணயக்கார -**





(எஸ்.அஷ்ரப்கான்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஏற்பாட்டில் பணியகத்திற்கும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையில் பரஸ்பர ஒற்றுமையை கட்டியெழுப்பும் வகையில் ”பணியக ஊடக மன்றத்தை ஸ்தாபித்தல்” தொடர்பான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (23) அம்பாறையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

அத்தோடு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடுகளுக்கு சென்று, அதன் பின்னர் நாட்டுக்கு வந்து நன்றாக தொழில் செய்து கொண்டு இருப்பவர்களின் கடந்த கால நிலையை கேட்டறிந்து அவர்களின் தகவல்களை வீடியோ மூலம் பணியகத்திற்கு அனுப்பிய ஊடகவியலாளர்களுக்கு பணப்பரிசும் அமைச்சரினால் இந்நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர், அமைச்சின் உயரதிகாரிகள், பணியகத்தின் உத்தியோகத்தர்கள், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிரேஷ்ட ஒலிபரப்பாளர் மஹ்ரூப் முஹிதீன் காலமானார்



(பஸ்ஹான் நவாஸ்)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் காலை நேரத்தில் இவரது குரலைக் கேட்காத எவரும் இருக்கமாட்டார்கள்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தின் சிரேஷ்ட அறிப்பாளர் மஹ்ரூப் முஹிதீன் அவர்கள் இன்று காலாமானார். முதல் தர அறிவிப்பாளரான இவர், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைக்கு நீண்ட காலமகப் பங்களிப்பு வழங்கிவந்தார்.

மௌவி யூசுப் முப்தியுடன் இணைந்து இவர் நடத்திய ” ரௌதுல் குர்ஆன் நிகழ்ச்சி” கடல் கடந்த நாடுகளிலும் புகழ்பெற்றதாகும். முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அவர்களின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாகவும் இவர் பணியாற்றினார்.

2000 ஆம் ஆண்டு முதல் நாடகக் கலைஞராக, செய்திவாசிப்பாளராக, அறிப்பாளராக, தயாரிப்பாளராக மஹ்ரூப் நானா வழங்கிய பங்களிப்புகள் மகத்தானவை.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அவர்கள் போக்குவரத்து அமைச்சராக பணியாற்றிய போது கொழும்பில் பணியாற்றும் அலுவலக ஊழியர்களுக்கான ” பௌசி” என்ற ரெயில் சேவையை ஆரம்பிப்பதற்கான யோசனையை மஹ்ரூப் நானா அவர்களே அமைச்சர் அவர்களிடம் முன்வைத்தார். பௌசி அவர்கள் பெற்றோலிய அமைச்சராக, சுகாதார அமைச்சராக இருந்த போது மஹ்ரூப் நானா அவர்களின் மூலம் உதவிகளைப் பெற்ற பல குடும்பங்கள் இன்றும் சிறந்த முறையில் வாழ்ந்து வருகிறார்கள்.

ஹஜ் பெருநாளைத் தொடர்ந்து வந்த வெள்ளிக்கிழமை அன்று ஜு்ம்ஆத் தொழுகையைப் பூர்த்தி செய்துவிட்டு நாம் இருவருமே ஒன்றாக அலுவலம் திரும்பினோம். அது தான் எமது கடைசி சந்திப்பு. எனது சீனப் பயணம் பற்றி பல தகவல்களைக் கேட்டறிந்தார். 2005ல் தனது ஹஜ் அனுபவத்தையும் என்னோடு பகிர்ந்துகொண்டார்.

நல்ல ஒரு மனிதன் மறைகின்ற போதே அவரது நல்ல பண்புகள் பிற மனிதர்கள் உண்மையாக்கப்படுகின்றன.

அல்லாஹ்தஆலா அவர்களுக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் மேலான சுவனபதியை வழங்கிவைப்பானாகவும். ஆமீன்!

# மர்ஹூம் புர்கான் (B.Com) – கிந்தோட்டையின் சிறந்த கல்விமான் மற்றும் சமூக செயற்பாட்டாளர்



அண்மையில் காலம் சென்ற மர்ஹூம் M.B.M. புர்கான் (B.Com) அவர்கள் ஒரு சிறந்த கல்விமானும் முன்மாதிரி மிக்க சமூக செயற்பாட்டாளரும் ஆவார் என்பதனை இன்றைய இளம் சமுதாயம் அறிந்திராவிட்டாலும் ஊரின் மூத்தவர்கள் அறிந்திருப்பார்கள்.

ஆரம்ப நிலைக் கல்வி மற்றும் க.பொ.த. சாதாரண தரம் வரையான கல்வியை கிந்தோட்டை ஸாஹிரா கல்லூரியில் பெற்றுக் கொண்ட மர்ஹூம் புர்கான் (B.Com) அவர்கள், க.பொ.த. உயர்தரக் கல்வியினை வர்த்தகத் துறையில் கம்பளை ஸாஹிரா கல்லூரியில் பெற்று சிறந்த பெறுபேற்றின் அடிப்படையில் களனி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, வணிகத்துறையில் இளமானி பட்டம் பெற்றதன் மூலம் கிந்தோட்டை ஸாஹிரா கல்லூரியில் கற்று உருவான முதலாவது வணிக இளமானிப் பட்டதாரியாகக் கருதப்படுகின்றார்.

இலங்கையில் பல முன்னணி வர்த்தக நிறுவனங்களில் கணக்காளராகப் பணியாற்றியதோடு, சொந்தமாக கணக்காய்வு நிறுவனமொன்றினையும், ஒரு பதிவு பெற்ற கணக்காய்வு நிறுவனமொன்றின் துணை நிறுவனமாக ஆரம்பித்தார்.

மாணவப் பருவத்திலிருந்தே பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் அக்கரையும், ஆர்வமும் காட்டிய மர்ஹூம் புர்கான் (B.Com) அவர்கள், கிந்தோட்டை ஸாஹிரா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளராக நீண்ட காலம் செயலாற்றியதோடு, பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி, புதிய ஆசிரிய மற்றும் அதிபர் நியமனங்களைப் பெற்றுக் கொள்வதில் முழு ஈடுபாட்டுடன் களப்பணியாற்றினார்.

பாடசாலையின் முன்னேற்றப் பாதையில் ஒரு திருப்புமுனையை உருவாக்கிய பாடசாலையின் முன்னால் அதிபர் ஆரிப் ஸேர் அவர்களை, பாடசாலையின் அதிபராகக் கொண்டு வருவதில் பெரும் எத்தனங்களை மேற்கொண்டது மர்ஹூம் புர்கான் (B.Com) அவர்களாவார். தன்னை கிந்தோட்டை ஸாஹிராவின் அதிபராக நியமனம் பெறச் செய்வதற்காக புர்கான் அவர்களின் எத்தனை செருப்புக்கள் தேய்ந்திருக்குமோ தெரியாது என்று ஆரிப் ஸேர் அவர்கள் அடிக்கடி கூறுவது, மர்ஹூம் புர்கான் (B.Com) அவர்களின் அயராத உழைப்பின் ஆழத்தினை எடுத்துக்காட்டுகின்றது. மர்ஹூம் அல்ஹாஜ் அன்வர், மர்ஹூம் அல்ஹாஜ் ஸத்தார், மர்ஹூம் அல்ஹாஜ் மர்ஸூக் போன்ற அன்றைய ஊரின் முக்கிய அதிதிகள் அனைவரையும் ஆரிப் ஸேர் அவர்களோடு இணைத்து பாடசாலையின் முழு நிர்வாகக் கட்டமைப்பு, முறைமைகள், விதிகள் மற்றும் பிரமாணங்களை வடிவமைப்பதிலும், ஒட்டுமொத்த மாற்றத்தினையும் உருவாக்குவதிலும் தனது முழுமையான பங்களிப்பினை வழங்கினார். மட்டுமல்லாது, 1996ம் ஆண்டளவில் பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவினை உருவாக்குவதிலும் தனது பங்களிப்பினை வழங்கியதோடு, விஞ்ஞானத்துறைக்கு தொண்டர் ஆசிரியராக நியமனம் பெற்ற ஆசிரியர் ஒருவருக்கு தனது வீட்டிலேயே சிறிது காலம் தங்குமிட வசதி வழங்கினார்.

பாடசாலையின் வளர்ச்சியில் இன்னுமொரு திருப்புமுனையை உருவாக்கிய முன்னால் அதிபர் ஜிப்ரி ஸேர் அவர்களின் காலப்பகுதியில் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட பௌதீக வளங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தனது ஆங்கில மொழிப்புலமை மூலம் தனது ஒருங்கிணைப்புப் பணிகளையும், தனது பலத்த சோலிகளுக்கு மத்தியில் வழங்கினார். நோய்வாய்ப்பட்டு இருந்த காலப்பகுதியிலும் தன்னை சந்திக்க வரும் அனைவரோடும் பாடசாலையின் நிலைமை பற்றியே விசாரித்துக்கொண்டிருப்பார். மட்டுமல்லாது, கிந்தோட்டை அஹதிய்யா இயக்கத்தில் இணைந்தும் பல களப்பணிகளை ஆற்றியுள்ளார்.

அல்லாஹ் அன்னாரைப் பொருந்திக் கொண்டு, அவர் சமூகத்திற்காக மேற்கொண்ட அரும்பணிகளை அங்கீகரித்து, அவரது பாவங்களை மன்னித்து ஜன்னதுல் பிர்தௌஸில் நுழைவிக்கச் செய்வானாக (ஆமீன்)

எம்.கே.எம். றஸ்மி,
அபிவிருத்தி அதிகாரி,
தென்மாகாணக் கல்வியமைச்சு
தலைவர் மற்றும் நிறுவனர்,
கல்வி மற்றும் விழுமிய எழுச்சிக்கான மன்றம் (Forum for Education & Ethical Development (FEED) – Gintota
பணிப்பாளர் மற்றும் இணை நிறுவனர்,
வரையறுக்கப்பட்ட கிங்கங்க பார்ம் (தனிப்பட்ட) கம்பனி.






நாச்சியாதீவு பர்வீன்

# பேராசிரியர் சபா ஜெயராசாவின் இருபெரும் நூல்களோடு!

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் ஒன்றிணைந்து கடந்த 2024, ஏப்ரல் 28ம் திகதியன்று வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது வழங்கல் நிகழ்ச்சியை நடத்துவிக்கிறார்கள்.

அந்தத் தமிழ் இலக்கியப் பெருவிழாவில் அடியேன் நானும் விருதுபெறும் படைப்பாளிகளுள் ஒருவராக அமர்ந்திருக்கிறேன்.

நிகழ்விலே ஒரு சிறப்பு அம்சமாக, 'வளர் தமிழ் கலைச்சொற்கள்' பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் நூல் அறிமுகமும் நடைபெறுகிறது. நூல்களில் ஒரு பிரதியை நமக்கும் பேரன்போடு வழங்குகிறார்கள்.

உண்மையிலேயே, நிகழ்வில் மா பெரிய விருது அதுதான். அந்த நூல் தான். ஒரு பெரிய பொக்கிஷமாக அதனை கருத்திற் கொண்டு எடுத்து வருகிறேன். எங்கள் பள்ளிக்கூட நூலகப் பாவனைக்கு இன்னொன்றும் என்று பெற்று வருகிறேன். வளர்ந்து வரும் ஒரு சிறு மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் அந்த நூல் ஒரு பென்னம் பெரிய வழிகாட்டி.

கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் என்று பல துறைகளில் கால் பதித்து வந்த பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தமிழ்மொழிக்கு அணி சேர்க்கும் வகையில் ஆக்கித்தந்திருக்கும் 'வளர் தமிழ் கலைச்சொற்கள்' உண்மையில் ஒரு அருமந்த நூல்.

தமிழ் இலக்கியப் பரப்பில் நம் முன்னோர்கள் பாவித்த அருஞ் சொற்கள் அருகி வரும் நிலையில் பல இருந்தன. பிழையான முன்மொழிவுகளுடன் சில சொற்கள் வலம் வரவும் செய்தன. அவற்றைத் திருத்தி இளம் மொழிப் பாவனையாளர்களுக்குக் கையளிக்கும் கடமை கற்றோர்க்கிருந்தது என்பது கண்கூடு.

தன் நூல்களிலும், சொற்பொழிவுகளிலும் அவ்வகை கலைச்சொற்களை பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் மிகு தீரத்துடன் அறிமுகப்படுத்தி வந்துள்ளார். நிஜத்தில் இந்தவகைக் கலைச்சொற்களை யெல்லாம் ஒருநிலைப்படுத்தி தமிழ் பேசும் மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் ஆவன செய்வது என்பது ஒரு விலை மதிப்பில்லாத முக்கியமான பணி.

உலக மொழிகள் இவ்வகை அணி சேர்ப்புடன் வெகு ஆழமாகவும் அகலித்தும் மொழிவளம் கண்டு, தத்தமது மொழிகளுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்ற காலத்தில், ஆங்கில மொழிச் சொற்களை நம் இனிய தமிழ்மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யும் பணி காலத்தின் தவிர்க்கவொண்ணாத் தேவையாகவும் இருந்தது.

அந்த 'வளர் தமிழ் கலைச்சொற்கள்' நூல் கையில் தவழும் இவ்வேளை, கொழும்பு சேமமடு பதிப்பகத்தின் 2011 வெளியீடாக பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களெழுதிய 'கலை இலக்கியக் களஞ்சியம்', மகன் 'ஜீவநதி' பரணீதரன் அவர்களின் மூலமாக கிடைக்கப்பெற்றது என் பேறு என்றுணர்கிறேன்.

விரிந்து மொழிகளுள் மொழியாகக் கலந்து மொழிபெயர்ப்பு இலக்கியங்களாக, ஒப்பீட்டு இலக்கியங்களாக, விமர்சன இலக்கியங்களாக பரிணாமம் கண்டு வீறுநடை போடும் பெரும் பிரயத்தன சாகரத்தில் தமிழ் மட்டும் அலைவீசியடித்துக் காணாமல் ஆகுவது தகுமாயிராது. கலை இலக்கியம் தொடர்பான ஆய்வுகளை, விமர்சனங்களை, தொகுப்புகளை நிதானித்து, அதேவேளை தீரத்துடன் முன்னெடுக்கும் ஆன்மாக்கள் உண்மையில் ஆசீர்வதிக்கத்தக்கவை. அதையேதான் உயர்திரு.தெ.மதுசூதனன் அவர்கள் சொல்லி வைக்கிறார்கள் தன் முன்னுரையில்.

கிட்டத்தட்ட நூற்றியிருபத்தாறு பக்கங்களில் ஒரு மாபெரும் அறிவுருவாக்கப்பணியில் முழுமையாகத் தன்னை உட்செலுத்தி, ஒரு யாகம் போல நூலை ஆக்கித் தந்துள்ளார் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்.

ஆயிரம் வகைத் தேடல்களில் இறங்கி, நமக்குத் தெரியாத பற்பல விடயங்களை பல்வேறு உதாரணங்களுடன் விபரித்துச் செல்கிறார் அவர். அகில மக்கள் கலை பற்றிய சொல்லாக்கத்துடன் தொடங்கி, ஹைக்கூ கவிதை வடிவம் வரை சுமார் நூற்றியெண்பது, நூற்றியெண்பத்தெட்டு தலைப்புகள் காணக்கிடைக்கின்றன.


சிலது முற்றிலும் புதிய தகவல்களை உள்ளடக்கியுள்ளவை. சிலது நம் முன்கூட்டிய அது பற்றிய அறிவைப் புடம் போட்டுத் திருத்துபவை.

நாடக இலக்கியங்களில் ஆற்றுகைத்துண்டங்கள் பின் அவை உறுங்காட்சிகளாகப் பிரிவதைப்பற்றி பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் விளக்குகிறார். அறவொழுக்க நாடகங்கள் ஏன் தோன்றின, அரங்க முகமூடிகள் எவ்வெவை நிமித்தம் பயன்பட்டன என்றெல்லாம் சிறப்பான விளக்கங்கள் அவரால் முன்வைக்கப்படுகின்றன. கவிதைகளில் அருவக்கவிதைகள் என்றால் என்ன, உருவக்கவிதைகள் என்றால் என்ன, உரைநடை இலக்கியங்கள் என்பவை யாவை, ஆடல் பாடல், இசை, இராகங்கள், இசைக்கதைகள், ஆடை வடிவமைப்புக்கலை, இதிகாசக்கதைகள், இதழியல், மற்றும் நாவல் இலக்கியங்கள் என்று அதி அற்புதமான விளக்கங்கள் பக்கம் பக்கமாய் விரித்து வைக்கப்படுகின்றன அவரால்.

கவிதையின் படிம இலக்கியம் மேலோங்கி வரக்காரணமாய் இருந்த ஹைக்கூ என்கிற ஜப்பானிய மிகச்சிறிய கவிதை வடிவம் குறித்து விளக்கம் தரும்போது, பேராசிரியர் சபா ஜெயராசா சொல்வார், அனைத்து ஜப்பானியக் கவிஞர்களும் இந்த வடிவத்தில் தான் கவிதைகள் புனைந்தனராம் என்று. எனினும், சிறப்பான இருவர் அவர்களுள் சுடடிக்காட்டப்படுவதாக. பஸ்ஸோ, கோபயாஸி இஸா ஆகியோர்களே அவர்களிருவரும் என்று. சொற்களால் ஆக்கப்படும் சிற்றோவியம் என்பார் அவர் ஹைக்கூ குறித்து. இப்படி இப்படி ஒவ்வொரு கலைச் சொல்லாக்கத்துக்கும் உதாரணங்கள் தந்து, அதன் தோற்றப்பாடு பற்றி அழகான விளக்கங்கள் முன்வைக்கிறார் நூலில்.

ஒரு மொழிபெயர்ப்பாளராக மட்டுமன்றி, ஒரு மொழி கற்பிக்கும் ஆசிரியையாகவும், மொழியைக்கற்றுத்தேற விரும்பும் மாணவியாகவும் கைகளில் தடவித்தடவி ஒரு புத்தகத்தினது பிரதியை எனக்கே எனக்கென்று வைத்துக் கொள்ள வேண்டும்போல.






பிரார்த்தனை செய்கிறேன் ஐயா உங்களின் மேலான சேவை நெடுங்காலம் நீடிக்க வேண்டும்.

- கெக்கிறாவ ஸுலைஹா -

# சீனன்கோட்டை முத்துக்கள் குழுமத்தின் ஒருவருட பூரத்தி



(பீ.எம்.முக்தார்)

பேருவளை சீனன்கோட்டைப் பகுதியில் கல்வி,சமூக,பொது சேவைகளை முன்னெடுக்கும் இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சீனன்கோட்டை முத்துக்கள்" குழுமத்தின் ஒரு வருட பூர்த்தி நிகழ்வும், புனித ஹஜ் பெருநாள் ஒன்று கூடல் வைபவமும் மற்றும் மூத்த சமூக சேவையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் (18) பேருவளை அக்கர தஹ அட்ட (இறப்பர் தோட்ட வரவேற்பு மண்டபத்தில்) குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெற்றது.

சீனன் கோட்டை ஸக்காத் கமிட்டித் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான ஏ.ஐ.எம் பாக்கிர் ஹாஜியார்,சீனன் கோட்டை முத்துக்கள் குழுமத்தின் மூத்த உறுப்பினரும் சமூக சேவையாளருமான ஜே.எம்.எம் முஹம்மத் ஸாலி ஹாஜியார் (மொம்ம ஸாலி ஹாஜியார்) ஆகிய இருவருமே நிகழ்வில் கௌரவிக்கப் பட்டவர்கள் ஆவர்.

நிகழ்வில் இந்த இரு சமூக சேவையாளர்களின் பணிகளைக் குழுமத் தலைவர் ராமிஸ் நாஸிம்,மற்றும் அஸ்வர் வபா ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

நிகழ்வில் பிரபல சமூக சேவையாளர்களான எம்.எப்.எம் ஹாரூன் ஹாஜியார்,ஸலீம் ஹாஜியார்,ரிஸ்வி ஹாஜியார் உட்பட குழுமத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

முழு நாள் நிகழ்வாக இடம் பெற்ற நிகழ்வில் குழும உறுப்பினர்களின் பல்வேறு கலை,கலாச்சார நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ள திட்டங்கள் குறித்து இந்த ஒன்று கூடலில் ஆராயப் பட்டது.

பிரதேசத்தில் உள்ள வறிய பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இடையூறின்றி தொடர கற்றல் உபகரணம் வழங்கள்,தரம் 5 புலமைப்பரேசில் பரீட்சைக்கும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கும் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கல்வி கருத்தரங்குகளையும் நடாத்தியதோடு பல சமூக,கல்வி,பொதுப் பணிகளையும் இந்த வட்சப் குழுமம் செய்துள்ளமை குறைப்பிடத் தக்க அம்சமாகும்.குழுமத்தில் உள்ள உறுப்பினர்கள் பரோபகாரிகளின் பங்களிப்பு இதில் முக்கியமானது.

இந் நிகழ்வில் உறுப்பினர்களுக்கான அடையாள் அட்டைகளும் வழங்கி வைக்கப் பட்டன.

இந்த வருடம் புனித ரமழான் மாதம் இப்தார் நிகழ்வொன்றையும் பலஸ்தீன மக்களுக்கான துஆப் பிரார்த்தனையையும் இந்த வட்சப் குழுமம் நடாத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா மோடியுடன் பேச்சு:

## 10 ஒப்பந்தங்களில் கைச்சாத்து!

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)



வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசீனா, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் முன்னிலையில் சுகாதாரம், மீன்பிடி தொழில் உள்பட இந்தியா – வங்கதேசம் இடையே 10 ஒப்பந்தங்கள் சனிக்கிழமை கையெழுத்தாகியது.

வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனா 2 நாட்கள் பயணமாக சனிக்கிழமை இந்தியா வந்துள்ளார். புதுதில்லி வந்த ஷேக் ஹசீனா ஜனாதிபதி மாளிகைக்கு சென்றார். அங்கு அவரை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.

பின்னர், இரு நாட்டு தலைவர்களும் இருநாட்டு உறவு, வர்த்தகம், நீர்வளம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனையில் இரு நாடுகளை சேர்ந்த முக்கிய அதிகாரிகள் பங்கேற்றனர்.

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, இன்று பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இரு தலைவர்களின் சந்திப்பை அடுத்து, இரு நாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதையடுத்து இரு தலைவர்கள் முன்னிலையில், இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதனை தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறியதாவது,

இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற வரும் வங்காளதேசத்தினர் எளிதில் விசா பெற இ-மருத்துவ விசா நடைமுறை அமல்படுத்தப்படும்.

வங்காளதேசத்தின் வடக்கு-மேற்கு பகுதி மக்கள் பலன் பெறும் வகையில் அந்நாட்டின் ரங்க்பூர் பகுதியில் புதிய இந்திய தூதரகம் திறக்கப்படும்.

டி20 உலகக்கோப்பையில் நடைபெறும் இந்தியா – வங்காளதேசம் இடையேயான ஆட்டத்தில் இரு தரப்பிற்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் – என்றார்.

# ஜாமிஆ நளீமிய்யாவின் கல்விக் கருத்தரங்கு–2024



"இஸ்லாமிய கற்கைகளின் சமகால போக்குகளும் இலங்கையில் அதன் மாதிரியும்" எனும் கருப் பொருளில் அமைந்த கல்விக் கருத்தரங்கு ஜாமிஆ வளாகத்தில் கடந்த 10,11,12.06.2024 ஆம் திகதிகளில் மூன்று நாட்களாக இடம் பெற்றது.

ஜாமிஆ நளீமிய்யாவின் இஸ்லாமிய கற்கைநெறிகள் பீடமும் மாணவர் வெளிக்கள செயற்பாடுகள் பிரிவும் இணைந்து பின்வரும் இலக்குகளை அடையும் நோக்குடன் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன:–

1. இஸ்லாமிய கற்கை நெறிகளை மாணவர்கள் ஆர்வத்தோடு கற்பதற்கான தூண்டுதலை வழங்குவது.
2. இஸ்லாமிய கற்கை துறையின் சமகால போக்குகள் குறித்து தெளிவை வழங்குவதற்கூடாக உயர்கல்வியைத் தொடர்வதற்கு வழிகாட்டல்களை வழங்குவது.
3. இலங்கையின் இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களது வரலாற்றை ஆராய்வதற்கான வழிகாட்டலை வழங்குவது.
4. ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் கல்விக் கொள்கை குறித்து தெளிவான பார்வையை ஏற்படுத்துவது.
5. இஸ்லாமிய கற்கைகளின் எதிர்காலப் போக்குகளை ஆராய்வது.
6. மாணவர்களது மென் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்தி செய்வது.

ஏழு அமர்வுகளாக இடம்பெற்ற இக்கருத்தரங்கில் ஒவ்வோர் அமர்விலும் தலா ஒவ்வோர் ஆய்வுரை வீதம் ஏழு ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வோர் அமர்வுக்கும் ,ஜாமிஆவின் துறைத் தலைவர்கள் தலைமை வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அங்குரார்ப்பண நிகழ்வில் கௌரவ அதிதியாகவும் விசேட பேச்சாளராகவும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.ஸ/ஹைர் கலந்து சிறப்பித்தார். கல்வித்துறைப் பணிப்பாளர் உஸ்தாத் ஐயூப் அலீ அவர்கள் தலைமை உரையையும் வரவேற்புரையையும் நிகழ்த்தினார்.

இத்தகைய கருத்தரங்கின் அவசியம், நோக்கம், கடந்த காலங்களில் இது போன்ற கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை, அவற்றால் சமூகத்திலும் நளீமிய்யா மாணவர்களது அறிவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக அவர் பேசினார்.

"முஸ்லிம் சமூகத்தில் ஆய்வு முயற்சிகளது அவசியம்" எனும் தலைப்பில் விஷேட உரையை நிகழ்த்திய ஜனாப் ஸ/ஹைர், முஸ்லிம் சமூகத்தில் ஆய்வினதும் ஆராய்ச்சியினதும் முக்கியத்துவம் தொடர்பாக பேசினார்.

1980 களில் ஜாமிஆ நளீமிய்யா ஏற்பாடு செய்த இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பான கருத்தரங்கின் பொழுது தான் பார்வையாளராக கலந்து கொண்டதாகவும் இந்த ஆய்வுகள் புத்தகமாக வெளிவந்த சந்தர்ப்பத்தில் அதிலிருந்து பல தகவல்களை தான் பெற்றுக் கொண்டதாகவும் அது சமூகத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் கூறியதுடன், ஆய்வுப் பணிகளுக்காக 'ஆய்வுக்கான நன்கொடை நிதியம்' என்ற ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சர்வதேச அரசியல் விவகாரங்களை ஆழமாக விளங்கிக் கொள்ளவும், இலங்கை சமூகங்களுக்கு இடையிலான உறவுகளை பலப்படுத்துவதற்கான அணுகுமுறைகளை மிகத்துல்லியமாக இனம் காண்பதற்கும்,முஸ்லிம் சமூகத்தின் பிளவுகளை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும், இஸ்லாத்தின் எதிரிகளது திட்டங்களை உரிய முறையில் அறிந்து கொள்வதற்கும் ஆய்வுகள் அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

ஜாமிஆ நளீமிய்யாவின் விரிவுரையாளரும் அதன் அரபு மொழி மொழி கற்கைகள் நிலையத்தின் தலைவருமான கலாநிதி அப்பாஸ்,"இஸ்லாமிய கல்விக் கோட்பாடு:ஒரு தத்துவார்த்த நோக்கு" என்ற தலைப்பில் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

கல்விக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம் பற்றி விரிவாகப் பேசிய அவர் , தனிமனித ஆளுமையில் பரிபூரண வளர்ச்சியை ஏற்படுத்துவதே இஸ்லாமிய நோக்கில் கல்வியின் நோக்கமாகும். மேற்குலக கல்விக் கோட்பாடு மதத்தையும் கல்வியையும் பிரித்து நோக்குகிறது. சடவாதத்தை ஏற்று வஹியை மறுக்கிறது. இதற்கு ஐரோப்பாவில் இடம் பெற்ற வரலாற்றுக் காரணங்கள் பல இருக்கின்றன. இஸ்லாமிய கல்வி ஸாலிஹான அமல் செய்பவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது."ஸாலிஹ்" என்றால் விரிந்த கருத்தை கொடுக்கும். மனிதனுக்கும் பிறருக்கும் இடையிலான உறவை வளர்க்கின்ற எல்லா காரியங்களும் ஸாலிஹான அமல்களாகும் என்றும் அவர் கூறினார். கல்வியின் வகைகள் பற்றியும் இஸ்லாமிய வரலாற்றில் மார்க்க கல்வி, உலக கல்வி என்ற பிரிவினை இருக்கவில்லை என்றும் கூறிய அவர், கல்வியியலாளரிடம் இருக்க வேண்டிய அடிப்படையான பண்புகளையும் தெளிவுபடுத்தினார்.

உரை -03

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளில் , மிஷ்காத் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் உஸ்தாத் மன்சூர் அவர்கள் "சமகால சூழலில் இஸ்லாமிய கற்கைகளை பயிலுவதன் அவசியம்" என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். முதலில்'இஸ்லாமிய கற்கைநெறிகள்' என்பதற்கான வரைவிலக்கணத்தைக் கூறிய அவர், அவற்றை கற்க வேண்டும் என்பதற்கான நியாயங்களை முன்வைத்தார்.

மதசார்பற்ற சிந்தனை, சடவாதம் என்பன சமூகத்தில் மிகபெரிய அளவில் பரவியிருக்கின்றன. அவற்றை முறியடித்து, முஸ்லிம் சமூகத்தை அவற்றின் தாக்கத்திலிருந்து காப்பாற்றவேண்டிய தேவை உள்ளது. நாம் முஸ்லிம் சிறுபான்மையாக வாழ்வதனால் நமது வாழ்வொழுங்கை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப இந்த நாட்டில் அமைத்துக் கொள்ள வேண்டும். பிற சமூக உறவுகளை உறுதிப்படுத்தவும் முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளால் சீர்குலைந்துள்ள உறவுகளை மீள கட்டியெழுப்பவும் வேண்டும். முஸ்லிம்கள் தமது தனிப்பட்ட வாழ்வு, சமூக வாழ்வு ஆகிய இரண்டு பகுதிகளையும் ஒழுங்குபடுத்த, பலப்படுத்த வேண்டும். தனிப்பட்ட வாழ்வு எனும் போது, நான் எங்கிருந்து வந்தேன், எதற்காக வந்தேன், என்னை அனுப்பியவர் யார், நான் எங்கு செல்ல இருக்கின்றேன் போன்ற அடிப்படைக் கேள்விகளுக்கு பதில் தேடிக் கொள்ள வேண்டும்.இது அகீதா பகுதியில் வரும்.

வணக்க வழிபாடுகள் எனும் போது, ஒருவர் நம்பிக்கை ரீதியாக தன்னை பலப்படுத்துவத வேண்டும். அதற்காக அவர் ஆன்மீக நடவடிக்கைகளில் ஆழமாக ஈடுபடுவது அவசியம். அந்தவகையில், 'களா கத்ர்',இரவு நேர வணக்கங்கள் போன்றன தொடர்பாக சற்று விரிவாகப் பேசிய அவர், மனித வாழ்வுக்கும் அகீதா பகுதியை வலுப்படுத இவை அவசியம் என்றும் கூறினார்.

இஸ்லாமிய கலாஞானங்களை கற்பதன் மூலமாகவே இந்த எல்லாப் பகுதிகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது என்பதை அவர் வலியுறுத்தியதுடன் தனது தலைப்போடு தொடர்பான சில உசார்த்துணை புத்தகங்களையும் குறிப்பிட்டார்.

"இஸ்லாமியக் கற்கைகளின் சமகாலப் போக்குகள்" எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்திய தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர் அவர்கள், இஸ்லாமிய கற்கைகளுக்கான வரைவிலக்கணத்தை கூறியதுடன் துறை சார் நிபுணர்களை உருவாக்குவதன் அவசியத்தை அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் வரலாற்று ஒளியில் விளக்கினார்.

தற்கால பல்கலைக்கழகங்களில் உள்ள பாடநெறிகளை நோக்குகையில் துறைசார் நிபுணர்கள் உருவாக்கப்படுவதற்கு ஏற்றாற் போல் அவை அமைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் அமுலிலுள்ள ளுடுஞகு முறை இதற்குச் சான்றாகும்.

சகல கலைகளுக்குமான அடிப்படைகளை அல்குர்ஆன் இட்டிருக்கிறது. வரலாற்றில் பொது மற்றும் மார்க்கக் கல்வி என்ற இரு துறைகளையும் ஏக காலத்தில் கற்ற முஸ்லிம் அறிஞர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் கல்வியை, உலகக் கல்வி, மார்க்கக் கல்வி எனக் கூறுபோடாது அறிவியலின் உச்சம் தொட்டவர்களாக இருந்தனர்.

பல வரலாற்றுக் காரணிகளால் அறிவியற் கலைகளில் முஸ்லிம்கள் பின்தங்கினர். இந்நிலையில் முஸ்லிம் உம்மத்தை கல்விரீதியாக மேலோங்கச் செய்வதற்கு கணிசமான அறிஞர்கள் உழைத்தனர். அறிவை இஸ்லாமிய மயப்படுத்துவதற்கான முயற்சிகள் அண்மைக் காலத்தில் வெகு தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இஸ்லாமியத் துறையோடு தொடர்பான கற்கை நெறிகள் தனியான இஸ்லாமிய பல்கலைக்கழகங்களிலும் பிற பல்கலைக்கழகங்களிலும் இருப்பது கவனிக்கத்தக்கது.

இஸ்லாமிய கற்கைகளுக்கென இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தனியான திணைக்களங்கள் உள்ளன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பிரத்தியேகமான ஒரு பீடம் 2005ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இலங்கையில் பட்டப்பின் படிப்புகளுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிக் கற்கைகள் வரை இத்துறையில் கற்பதற்கான வாய்ப்புகள் உண்டு.அதேபோன்று அறபு மற்றும் ஆங்கில மொழிகளினூடாக உயர்கல்வியைத் தொடர்வதற்கு உலகின் பல நாடுகளிலும் வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் கூறினார்.



கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கபூர்தீன் அவர்கள் "இலங்கையில் இஸ்லாமிய கற்கைகள் ஒரு வரலற்றுஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

இலங்கையின் அரபு கலாசாலைகளது வரலாற்றை நான்கு காலகட்டங்களாக வகுத்து விளக்கிய அவர், 1931 வகையான காலப்பிரிவு வரை தென்னிந்திய 'தர்ஸே நிழாமி' பாடத்திட்டம், ஷாபி மத்ஹப், தரீக்காக்களின் வழிகாட்டல்,எட்டு வருட கற்கை நெறி, ஆசிரியர் மையக் கல்வி, இந்திய ஆசான்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டமை போன்ற பண்புகளைப் பெற்றிருந்ததாகவும் அறிஞர் சித்தி லெப்பைக்கு பின்னர் மார்க்க கல்வி ஸ்தாபனங்களது இலக்குகள், பாடவிதானம் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் சமயக்கல்வி வரலாற்றில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் கனிசமான பங்கு வகித்துள்ளார். மேலும்,1890களில் மார்க்க கல்வியையும் பொதுச் கல்வியையும் பற்றிய புரட்சிகர கருத்துக்களை அறிஞர் சித்திலெப்பை முன்வைத்தமை பிற்பட்ட மத்ரஸா கல்வியில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பாக அமைந்தது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் மத்ரஸாக்களில் இருந்து வெளியேறிய உலமாக்கள் அரச பாடசாலைகளில் ஆசிரியர்களாக இணைந்து கொண்டதோடு சுதேச மற்றும் இந்தியா, எகிப்து போன்ற நாடுகளது பல்கலைக்கழகங்களிலும் சென்று கல்வி கற்றனர் பொது வேலை திட்டங்களில் தம்மை நெருக்கமாக ஈடுபடுத்திக் கொண்டனர். சுதந்திரத்திற்கு பின்னர் இன்னும் இத்துறையில் மாற்றம் ஏற்பட்டது. அந்தவகையில், குறுகிய இலக்குகளில் இருந்து சமூக, தேசிய நலன்கள் போன்ற இலக்குகளை நோக்கி அரபு கலாசாலைகள் நகர்ந்தன.

தேசிய கல்விக் கொள்கையில் இஸ்லாமிய கற்கைகள் அங்கீகரிக்கப்பட்டன. இஸ்லாமிய ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1980களின் பின் திறந்த பொருளாதாரக் கொள்கை மிகப் பெரிய திருப்பங்களை இஸ்லாமிய கற்கைகளில் ஏற்படுத்தியது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களோடு நமது நிறுவனங்கள் ஒப்பந்தங்களை செய்தன. தொண்டு நிறுவனங்களோடு தொடர்புகள் ஏற்பட்டன. இஸ்லாமிய உலகத்தின் நவீன,சர்வதேச கல்விப் போக்குகள் பற்றிய விரிவான அறிமுகம் நாட்டிலே ஏற்பட்டது. தஃவாவை அடிப்படையாகக் கொண்ட, கொள்கைகள் சார்ந்த மதரஸாக்கள் தோற்றம் பெற்றன.

இதுவரை சுமார் 325 மதரஸாக்கள் கலாசாரத்தை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டாலும். அவற்றில் அரைவாசி குறிப்பிட்ட ஒரு சிந்தனையை சார்ந்திருக்கின்றன. மத்ரஸாக்களுக்கான ஒருங்கிணைந்த, பொதுப் பாடத்திட்டம் ஒன்றை வரைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அந்த முயற்சிகள் இதுவரையும் கைகூடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது நாள் நிகழ்ச்சிகளில் முதலாவதாக, ஜாமிஆ நளீமிய்யாவின் விரிவுரையாளரும் அதன் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியுமான அஷ்ஷைக் பளீல் அவர்கள் "ஜாமிஆ நளீமிய்யாவின் கல்விக் கொள்கைகளும் சாதனைகளும்" எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் நிலவிய மத்ரஸா கல்வி முறையின் குறைபாடுகளை அவதானித்த சிந்தனையாளர்கள் ஜாமிஆவின் தேவையை உணர்த்தினார்கள் என்றும் அவர்களுக்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களது சிந்தனை தாக்கம் இருந்தமை இதற்கான காரணம் என்றும் அவர் கூறினார்.

1973 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஜாமிஆவின் கொள்கையை உள்ளடக்கிய கையேட்டிலே ஜாமிஆவின் தேவை, அதன் இலக்குகள் சம்பந்தமாக தெளிவாக கூறப்பட்டிருப்பதாக கூறிய அவர், அதன் தொலை நோக்கு, பணிக்கூற்று தொடர்பாக அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் நினைவுபடுத்தினார்.

அடிப்படையில் ஷரீஆத் துறையை ஆழமாக்க கற்றவர்களை, இஸ்லாமிய துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்குவதற்கு ஜாமிஆ தோற்றுவிக்கப்பட்டதாகவும் உலகாயத கலைகள் அல்லது பொதுக் கல்விப் பாடங்கள் அவற்றுக்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்ற வகையில் தான் கற்பிக்கப்படுவதாகவும் வலியுறுத்தினார்.

ஜாமிஆவில் கற்ற பழைய மாணவர்களது தஃவா, கல்வி,சமூகப் பணி போன்ற துறைகளிலான பங்களிப்புகளை அவர் விரிவாக பட்டியல்படுத்தினார். ஜாமிஆவின் பிரிவுகள், கலைத்திட்டத்தின் உள்ளடக்கம் என்பன தொடர்பாகவும் அவரது உரை அமைந்திருந்தது.

இறுதியாக, ஏழு வகையான தளங்களில் ஜாமிஆவின் மாணவர்கள் தங்களை உருவாக்க வேண்டும் என்று கூறிய அவர், அவர்கள் தமது நம்பிக்கைப் பகுதியை வலுப்படுத்துவது,தெளிவான ஆழமான அறிவைப் பெறுவது ,இபாதத்களில் மிகுந்த ஈடுபாடு காட்டுவது,உள்ளத்தோடு தொடர்பான, உடலோடு தொடர நற்பண்புகளை வளர்ப்பது,திறன்கள் மற்றும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்வது,உடல் ஆரோக்கியத்தில் கவனமெடுத்து அதனை பாதுகாப்பது, தெளிவான இலக்குகளை வகுத்து அவற்றை குறிகோளாகக் கொண்டு வாழ்வது என்பனவாகும் என்றும் குறிப்பிட்டார். மேலும், ஜாமிஆவின் மகுட வாசகங்களாக இருக்கும் இரண்டு குர்ஆன் வசனங்களையும் நினைவுபடுத்தி ஜாமிஆ காலத்தின் தேவையை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட உயர்ந்த கலாபீடம் என்ற சிந்தனையை வலியுறுத்தினார்.

ஜாமிஆ நளீமிய்யாவின் விரிவுரையாளர் கலாநிதி அரபாத் கரீம் அவர்கள் "இஸ்லாமிய கற்கைகளும் இலங்கையில் அவற்றின் எதிர்காலமும்" எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

முன்னறிவிப்பு செய்வது எதிர்காலம் குறித்து சிந்திப்பது, ஆராய்வது இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது ஹனபி சட்ட மரபானது எதிர்கால ஆய்வுகளுக்கு முன்னோடியாக அமைந்ததை மேற்கோள்காட்டி, ஷரீஆ கற்கைகளின் எதிர்காலம் குறித்து ஆராய்வதின் அவசியத்தை அவர் தனது உரையில் வலியுறுத்தினார். இஸ்லாமிய கற்கைகளின் எதிர்காலம் குறித்து பல்வேறு ஆய்வுகளை சர்வதேச அறிஞர்கள் மேற்கொண்டிருப்பதாகவும் ஷரீஆ கற்கைநெறியினது எதிர்காலப் போக்கு எவ்வாறு அமையவேண்டும் எனவும் பல பிரேரணைகள், முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதை தனது ஆய்வுரையில் அவர் ஓரளவு விரிவாக விளக்கினார்.

இஸ்லாமிய உலக நோக்கை முன்வைத்தல், துறைசார் அறிஞர்களை தோற்றுவித்தல், கோட்பாட்டையும் நடைமுறையையும் இணைத்த ஆய்வுகளை மேற்கொள்ளல், இஸ்லாமிய கலைகளை சமகால சூழலில் பிரயோகித்தில், இஸ்லாமிய கற்கைகளது வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தல், இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்களுக்கு தெளிவை வழங்குதல், உலக நாகரிகத்துக்கு இஸ்லாமிய கலைகளின் பங்களிப்பு என பல்பரிமாணம் கொண்டவையாக ஷரீஆ கற்கைகள் எதிர்காலத்தில் அமையவேண்டும் என்பது தொடர்பில் தற்காலதில் சர்வதேச மட்டங்களில் ஆராயப்படுவதை அவர் விளக்கினார்.

இஸ்லாத்தின் நாகரீக பங்களிப்பை பிற சமயத்தவரும் தெரிந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் கட்டாயம் செய்யப்பட வேண்டும் என்று கூறிய அவர் சமகால கற்கைகளை 1. பாரம்பரிய இஸ்லாமிய கலைகளை அணுகுவதற்கான முறைமையை ஒழுங்கு செய்தல். 2. சமகால இஸ்லாமிய சிந்தனையை திசை முகப்படுத்தல். 3. ஆய்வுகளை எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப மதம்சார்ந்த நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தல் என மூன்று வகையாகப் பிரித்தார். சமகால இஸ்லாமிய கற்கைநெறிகள் குறித்த தனது அவதானங்களை முன்வைத்த அவர் எதிர்காலத்தை பொறுத்தவரையில் இத்துறையில் குறிப்பிடத்தக்க சில திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கிறது என்றும் கூறினார்.

இலங்கையில் இஸ்லாமிய கற்கைகளது எதிர்காலம் குறித்து முக்கிய விடயங்களை தனது உரையில் அவர் தொட்டுக் காட்டினார். அந்தவகையில், அனைவரும் இஸ்லாத்தை கற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுவதும், எமது நாட்டுக்குத் தேவையான இஸ்லாமிய துறையில் விற்பண்ணர்களை உருவாக்குவதும் அவசியமாகும். இஸ்லாமிய கற்கைகளை துறைபோகக் கற்பதற்கான சிறந்த வாய்ப்புக்கள் உருவாகியிருக்கின்றன. பல்லின சமூக கட்டமைப்பில் மதசகிப்புத் தன்மையுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். இஸ்லாமிய கற்கைகளது கலைத்திட்டம், போதனா முறை, உட்கட்டமைப்பு என்பன வடிவமைக்கப்படுவது எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்க அவசியமாகும் .இஸ்லாமிய கற்கைகளுக்கு நல்ல எதிர்காலமும் தேவையும் இருந்து வருகிறது. ஆனால் எதிர்கால மாற்றங்களுக்கு ஏற்ப துறைபோக கற்க வேண்டிய தேவையையும் இருப்பதாக அவர் வலியுறுத்தினார்.

கருத்தரங்கின் ஏனைய நிகழ்ச்சிகள்

கல்விக் கருத்தரங்கின் போது ஜாமிஆவின் மாணவர்கள் அனைவரும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஓவ்வொரு குழுவுக்கும் நளீமியாவின் ஸ்தாபகர் நளீம் ஹாஜியாருடன் இணைந்து ஜாமிஆவை ஸ்தாபிப்பதிலும் ஜாமிஆவின் சிந்தனைக்கு வித்திடுவதிலும் முக்கிய பங்கு வகித்த கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ்,கலாநிதிஎம்.ஏ.எம்./ஷ்ரி,மௌலவி யூ.எம் தாஸீம், மௌலவி ஏ.எல்.எம் இப்ராஹீம் ஆகியோரின் பெயர்கள் இடப்பட்டிருந்தன. இது தவிர அறிஞர் அறிமுக உரைகள் ,ஆன்மீக உரைகள் (காதிரா),விளையாட்டுப் போட்டிகள், நான்கு அறிஞர்களைப் பற்றிய றாபிதா கலமிய்யா சுவரொட்டிப் பத்திரிகை ஆக்கங்கள், கண்காட்சி அறை ஆக்கங்கள், அறிஞர்கள் பற்றிய பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளாக போட்டி அடிப்படையில் இடம்பெற்று இறுதித் தினத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# பாகிஸ்தான் பொருளாதார சரிவு...

## திவாலாகும் நிலையில் பாகிஸ்தான்

பாகிஸ்தானின் கடன் நிலைமை தீவிரமான நெருப்பு போல பரவி வருவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீட்டை விட மோசமாக உள்ளது என்றும் கூறியுள்ளது. பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடி கட்டுப்படுத்தக்கூடியது என சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு செய்தது இந்த நேரத்தில் நினைவு கூறத்தக்கதாகும்.

இஸ்லாமாபாத்தை மையமாக கொண்ட தபாட்லாப் அமைப்பு பாகிஸ்தானின் பொருளாதார நிலை குறித்து சமீபத்தில் நடத்திய ஆய்வின் முடிவுகளை வெளியிட்டுள்ளது. அதில் பாகிஸ்தான் மிக மோசமான பொருளாதார பேரழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தற்போது மிகப்பெரிய கடன் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது, இது பேரழிவு தரும் பொருளாதார சுழற்சியை தூண்ட கூடும் என அந்த ஆய்வறிக்கை எச்சரிக்கை விடுத்துள்ளது. பாகிஸ்தானின் தனிநபர் கடன் 2011இல் 823 அமெரிக்க டாலர்களாக இருந்த நிலையில் 2023இல் 1122 அமெரிக்க டாலர்கள் என 36 விழுக்காடு அதிகரித்துள்ளது. பாகிஸ்தானின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2011 இல் 1295 அமெரிக்க டாலர்களாக இருந்த நிலையில் 2023இல் 1223 அமெரிக்க டாலர்களாக குறைந்துள்ளது.

பாகிஸ்தானில் கடன் மற்றும் வருமான வளர்ச்சி விகிதங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வு அதிகரித்துக் கொண்டே போகிறது.

உதாரணமாக, 2011 ஆம் ஆண்டில் பிறந்த ஒரு குழந்தைக்கு 70,778 பிகேஆர் (பாகிஸ்தான் நாணயம்) கடன் இருந்தது, ஆனால் அதுவே 2023 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைக்கு 3, 21,341 பிகேஆர் என உயர்ந்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2011 முதல் பாகிஸ்தானின் வெளிநாட்டு கடன் கிட்டத்தட்ட இரட்டிப்பாகியுள்ளது, அதே நேரத்தில் அதன் உள்நாட்டு கடன் ஆறு மடங்கு அதிகரித்துள்ள

உற்பத்தி துறைகளிலோ அல்லது தொழில்துறையிலோ முதலீடுகள் இல்லாத நுகர்வு சார்ந்த மற்றும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரமாக இருப்பதே பாகிஸ்தானின் இந்த நிலைக்கு காரணம் என்கிறது தபாட்லாப் அறிக்கை. சமூக பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, பருவநிலை மாற்றத்திற்கு ஏற்றவாறு மாறுவதற்கான உத்திகள் ஆகியவற்றுக்கு வரும்நாட்களில் அதிக நிதி தேவைப்படும். இதற்காக மேலும் மேலும் கடன்களை வாங்கி பொருளாதார பேரழிவை பாகிஸ்தான் சந்திக்க போகிறது என்கிறது அந்த அறிக்கை.

ஜீசஸ் அலாவுதீன் மற்றும் அமரஹபீப் கான் ஆகியோரால் எழுதப்பட்டுள்ள இந்த அறிக்கையின் படி பாகிஸ்தானின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன் 2011ஆம் ஆண்டு முதல் கணிசமாக அதிகரித்துள்ளது. இதற்கிடையே நிலை ஆட்சி இல்லாதது, இயற்கை பேரிடர்கள் ஆகியவற்றால் ஸ்திரத்தன்மை இல்லாமல் பொருளாதாரம் சிக்கி கிடக்கிறது. எனவே பருவநிலை பேரழிவுகளுக்கு ஆளாக கூடிய பாகிஸ்தான் மீட்பு மற்றும் நிவாரணம் ஆகியவற்றுக்கான கணிசமான நிதி ஆதாரத்தை உருவாக்க வேண்டும் என இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது. மாற்றம் மற்றும் விரிவான சீர்திருத்தங்கள் இல்லாமல் பாகிஸ்தானின் கடன் நெருக்கடி தீராது என்று தெரிவித்துள்ளது. அதிகரித்து வரும் கடன் அளவுகள் பொருளாதார வளர்ச்சியை தடுக்கின்றன, ஏனெனில் அவை உற்பத்தி முதலீட்டை விட நுகர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன, இந்த போக்கை மாற்றினால் ஓரளவு தப்பிக்கலாம் என இந்த அறிக்கை அறிவுறுத்தியுள்ளது.

கோடைகால சேமிப்பு ஒப்பந்தம்யீஜப் பெறவும்

கனடா செய்திகள்ருமு செய்திகள்அமெரிக்க செய்திகள்ஜக்கிய அரபு எமிரேட்ஸ்சவூதி அரேபியா

இதற்கு இடையில் சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் ஆற்றல் குறித்த இரண்டு நாள் ருநுகு சிறப்புக் கூட்டத்தில் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் கலந்து கொண்டார். ருநுகு இன் நிறைவு அமர்வின் போது நாட்டில் அதிகரித்து வரும் பணவீக்க விகிதங்கள் குறித்து அவர் கருத்து தெரிவித்தார். நாட்டின் கடன்கள் ஒரு அழுத்தமான கவலையாகிவிட்டன, அதை அவர் ”மரணப் பொறி” என்று அழைத்தார் என்று பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் தெரிவித்தார். இஸ்லாமாபாத், தற்போதைய கூ3 பில்லியன் காத்திருப்பு ஏற்பாடு இந்த மாதம் காலாவதியான பிறகு, நிதியுடன் புதிய, பெரிய நீண்ட கால நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஒப்பந்தத்தை நாடுகிறது. எவ்வாறாயினும், புதிய பிணை எடுப்புப் பொதி பற்றிய பேச்சுக்களுக்கு மத்தியில் பாகிஸ்தானுக்கு 1.1 பில்லியன் டாலர் நிதியுதவிக்கு ஐஆகு ஒப்புதல் அளித்தது. பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடி குறித்து கிண்டல் செய்த இந்திய பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிச்சைக் கிண்ணத்துடன் உலகம் முழுவதும் சுற்றித் திரிகிறது என்றார். பாகிஸ்தான் தற்போது ஐம்பது ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச பணவீக்கத்தை எதிர்கொள்கிறது. உணவுப் பணவீக்கம் 48 சதவீதமாக உயர்ந்துள்ளது. சமீபத்திய மாதங்களில், பணவீக்கம் 38 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது, இது தெற்காசியாவில் மிக உயர்ந்த விகிதத்தைக் குறிக்கிறது.

அதிகரித்து வரும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (PoK) கடந்த மாதங்களில் நடைபெற்ற போராட்டங்கள் முதல் வன்முறை ஆர்ப்பாட்டங்களில் ஒரு போலீஸ் அதிகாரி கொல்லப்பட்டார் மற்றும் 90 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உணவு நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானில் வானளவு உயர்ந்துவிட்ட கோதுமை விலைக்கு எதிராக கில்கிட் பகுதியில் போராட்டங்கள் தொடங்கிவிட்டன. பாகிஸ்தானில் தேர்தலுக்கு முன்பாக இருந்தே பணவீக்கம் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது, மேலும் மக்கள் தங்கள் வாழ்க்கையை சம்பாதிப்பது கூட கடினமாகி வருகிறது. விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ள நிலையில், கோதுமை விலைக்கு எதிராக கில்கிட்-பால்டிஸ்தான் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினார்கள்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் கோதுமையின் விலையை உயர்த்தியுள்ளதைக் கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. விலைவாசி உயர்வுக்கு எதிராக கில்கிட்-பால்டிஸ்தானின் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் வீதிகளில் இறங்கினர். பாகிஸ்தான்பொருளாதாரம் அதன் வரலாற்றில் மிக மோசமான கட்டத்தில் சென்று கொண்டிருக்கிறது மற்றும் பணவீக்கம், வேலையின்மை, கறுப்பு சந்தைப்படுத்தல் ஆகியவையும் ஒரு பெரிய பிரச்சனையாகும்.

பாகிஸ்தானின் பொருளாதாரம் மிகக் குறைந்த நிலையை எட்டியுள்ளது. பாகிஸ்தான் கடுமையான கடன் வலையில் சிக்கியுள்ளதால் அங்கு மக்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. மற்ற நாடுகள் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு கடன் வழங்க மறுத்துவிட்டன. சமீபகாலமாக மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது, இதனால் மக்களின் செலவுகள் கிடுகிடுவென உயர்ந்ததை அடுத்து, பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அந்த உத்தரவை அரசு திரும்பப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மானிய விலை கோதுமையின் விலையை உயர்த்தும் அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஒரு மாதமாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கில்கிட்-பலுசிஸ்தான் தவிர, நாட்டின் பிற பகுதிகளிலும் பணவீக்கத்திற்கு எதிராக பொது மக்கள் தெருக்களில் இறங்கினர்.

கில்கிட்-பலுசிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு பாரபட்சம் காட்டுவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. பொது வசதிகள் மற்றும் தேசிய வளங்களை அரசாங்கம் சமமற்ற முறையில் பகிர்ந்தளிப்பதாக பல உள்ளூர் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. பாகிஸ்தானின் கில்கிட்-பலுசிஸ்தான் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதி, இங்கு மின் நெருக்கடியும் உள்ளது. இந்தப் பகுதியில் ஒரு நாளில் 22 மணி நேரம் மின்சாரம் இல்லை என்றும், மக்கள் விவசாயத்திற்கு பழைய முறைகளையே நம்பியிருப்பதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதிகரித்து வரும் உணவு மற்றும் எரிபொருள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை எதிர்த்து நடந்த வேலைநிறுத்த போராட்டத்தின் போது, பிராந்தியத்தில் வணிகர்கள் தலைமையிலான கூட்டு அவாமி நடவடிக்கைக் குழுவின் சுமார் 70 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து வன்முறை வெடித்தது. பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடி மற்றும் உயர் பணவீக்கம் அதன் மக்களுக்கு கஷ்டங்களை விளைவித்துள்ளது.இந்தியாவுடனான வர்த்தகத்தை நிறுத்துவதால் வர்த்தகர்களில் ஒரு பகுதியினர் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திய பொருளாதாரம் சர்வதேச அளவில் வளர்ந்து வரும் நிலையில் பாகிஸ்தான் வீண் பிடிவாத நடவடிக்கைகள் காரணமாக மிகுந்த சிரமத்திற்கு தன்னை தானே உருவாக்கி கொள்ள முனைகிறது. இந்த நேரத்தில் பாகிஸ்தான் வறட்டு கவுரவம் தேவையில்லை என்பதே உண்மையாகும்.

மின்சாரம் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து வணிகர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதிக மின் கட்டணத்திற்கு எதிராக இதேபோன்ற போராட்டங்கள் நடந்தன.

பொது போக்குவரத்து, கடைகள், சந்தைகள் மற்றும் வணிகங்கள் மூடப்பட்டதால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரம் மற்றும் மிகப்பெரிய நகரமான முசாபராபாத்தில் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. மிர்பூர் மற்றும் முசாபராபாத் பிரிவுகளில் ஏராளமான போராட்டக்காரர்கள் தடுப்புகளை உடைத்து போலீசாருடன் மோதிக்கொண்டனர்.இதற்கிடையில் பாகிஸ்தான் சட்டமன்றம் மற்றும் நீதிமன்றங்கள் போன்றஅரசாங்க கட்டிடங்களை பாதுகாக்க துணை ராணுவ ரேஞ்சர்கள் அழைக்கப்பட்டனர்.

தற்போதைய நிலையில் அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகள் காரணமாக பாகிஸ்தானின் பொருளாதாரம் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மிக அதிக பணவீக்கம் மற்றும் மோசமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளது. நுகர்வோர் பணவீக்கம் மே 2022 முதல் 20% க்கு மேல் உள்ளது, மேலும் மே 2023 இல் 38% ஐ தொட்டது என்று பாகிஸ்தான் பிரபலமான செய்தி ஏடான டான் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதில் பாகிஸ்தான் அரசாங்கம் பாகுபாடு காட்டுவதாகக் கூறி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். நீலம்-ஜீலம் திட்டத்தால் உற்பத்தி செய்யப்படும் 2,600 மெகாவாட் நீர்மின்சாரத்தில் நியாயமான பங்கைப் பெறவில்லை என்று பிராந்தியத்தின் முதல்வர் சௌத்ரி அன்வருல் ஹக் புகார் அளித்ததாக டான் செய்தித்தள் தெரிவித்துள்ளது.

அண்மைய வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஆதாரங்களுக்கான தனது கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றும், அவர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்காக மேம்பாட்டு நிதியை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் முதல்வர் ஹக் கூறியுள்ளார்.

பிப்ரவரி 2019 புல்வாமா பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, உலர் பேரீச்சம்பழம், கல் உப்பு, சிமெண்ட் மற்றும் ஜிப்சம் போன்ற பாகிஸ்தானின் பொருட்களுக்கு 200மூ சுங்க வரியை இந்தியா உயர்த்தியதால் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள வர்த்தகர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதன் விளைவாக, இந்தியாவுக்கான பாகிஸ்தானின் ஏற்றுமதி சராசரியாக குறைந்தது. 2018 இல் மாதத்திற்கு கூ45 மில்லியன் என இருந்தநிலையில், மார்ச் மற்றும் ஜுலை 2019 க்கு இடையில் மாதத்திற்கு கூ2.5 மில்லியன் மட்டுமே ஏற்றுமதி இருந்தது என டான் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 2019 இல் ஜம்மு மற்றும் காஷ்மீரில் மோடி அரசு மேற்கொண்ட மேற்கொண்ட அரசியலமைப்பு 370 சட்டப்பிரிவு வாபஸ் மாற்றங்களைத் தொடர்ந்து பாகிஸ்தான் அனைத்து வர்த்தகத்தையும் நிறுத்திய பின்னர் நிலைமை மிகவும் கடினமாகிவிட்டது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியா-பாகிஸ்தான் வர்த்தகம் ஆண்டுக்கு 2 பில்லியன் டாலராக குறைந்துள்ளது, இது உலக வங்கியால் மதிப்பிடப்பட்ட கூ37 பில்லியன் வர்த்தக திறனில் ஒரு சிறிய பகுதியே ஆகும்.

ரஷ்யா-உக்ரைன் போருக்குப் பிறகு உலகளாவிய உணவு மற்றும் எரிபொருள் விலைகள் உயர்ந்ததிலிருந்து பாகிஸ்தானின் அந்நியச் செலாவணி கையிருப்பு வெகுவாகக் குறைந்துள்ளது. 2022-23 இல் இதேபோன்ற அந்திய செலாவணி சமநிலை நெருக்கடி இலங்கையையும் முடக்கியது, மேலும் இந்தியா ஆதரவு நடவடிக்கைகளை நீட்டிக்க வழிவகுத்தது.

பாகிஸ்தானின் ஸ்டேட் வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு ஆகஸ்ட் 2021 இல் கூ 20.1 பில்லியனில் இருந்து பிப்ரவரி 2023 இல் கூ 2.9 பில்லியனாக குறைந்தது, இது ஒரு மாத இறக்குமதியை மட்டுமே ஈடுசெய்ய போதுமானது. பாகிஸ்தான் அதன் மொத்த முதன்மை எரிசக்தி விநியோகத்தில் கிட்டத்தட்ட 40% இறக்குமதி செய்கிறது.

பாகிஸ்தானின் பெரும்பாலும் உதவி சார்ந்த பொருளாதாரம் வளர்ச்சியடையாத தனியார் துறையைக் கொண்டுள்ளது, மேலும் அதன் பங்குச் சந்தை பல ஆண்டுகளாக மிகக் குறைந்த வளர்ச்சியைக் காட்டுகிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) FY23 இல் 0.17மூ குறைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு) சமீபத்தில் பாகிஸ்தானுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூ123 பில்லியன் மதிப்புள்ள மொத்த நிதி தேவை என்றும், 2024-25 நிதியாண்டில் கூ21 பில்லியன் மற்றும் 2025-26ல் $23 பில்லியனை பாகிஸ்தான் எதிர்பார்க்கும் என்றும் கூறியது.

இந்தியாவுடன் எல்லையை பகிர்ந்துகொண்டுள்ள பாகிஸ்தான் எப்போது வேண்டுமானாலும் திவால் ஆகலாம் என்ற நிலையில் இருக்கிறது. அந்நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்ற ஐஆகு அமைப்பிடம் நிதியுதவியைப் பெற நாள்தோறும் போராடி வருவது மட்டும் அல்லாமல் அரசின் நிதிநிலையை மேம்படுத்தப் பல கட்டணத்தையும், வரியையும் பாகிஸ்தான் அரசு உயர்த்தியுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் நாட்டில் புதிதாக அமைந்துள்ள அரசு பல முக்கிய மாற்றத்தைச் செய்துள்ளது, குறிப்பாக ஒவ்வொரு துறையிலும் திறமையான, அனுபவம் உள்ள அதிகாரிகளை நியமிக்கும் முயற்சியை ஷெபாஸ் ஷெரீப் அரசு எடுத்துள்ளது.

பாகிஸ்தான் அரசு அந்நாட்டுப் பொருளாதாரம் திவால் ஆவதை தடுக்கும் பொருட்டு, பல நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், அந்நாட்டின் பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை யாரும் எதிர்பார்க்காத வகையில் 16.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் அரசு 2025 ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் புதன்கிழமை வெளியிட்ட நிலையில், பாகிஸ்தான் அரசு ராணுவத்திற்கான ஒதுக்கப்பட்டு உள்ள நிதி தொகையை அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த பட்ஜெட்டில் அறிக்கையில் கூடுதலாகப் பாகிஸ்தான் அரசு ஊழியர்களின் சம்பளமும் 25% உயர்த்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மிக மோசமான பொருளாதார நிலையில் இருந்தாலும், அந்நாட்டில் ஆயுத உற்பத்தி பெரிதாக இல்லாத நிலையிலும், வெளிநாட்டில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்ய ராணுவத்திற்குத் தொடர்ந்து பணம் செலவழித்து வருகிறது.

2024-25 நிதிய ஆண்டிற்கான ராணுவ நிதி ஒதுக்கீட்டில் 7.37 பில்லியன் டாலர் ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டில் 6.33 பில்லியன் டாலர் அளவீட்டை ஒப்பிடுகையில் 16.4மூ அதிகமாகும்.

இதேவேளையில் இந்தியாவின் இடைக்கால பட்ஜெட் அறிக்கையில் இந்திய அரசு பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 75.2 பில்லியன் டாலராக இருந்தது. இது கடந்த ஆண்டை விட 4.7மூ மட்டுமே அதிகமாகும்.

இதேபோல் சீனா இந்த நிதியாண்டில் அதன் பாதுகாப்புத் துறைக்கான பட்ஜெட் ஆக 232 பில்லியன் டாலர் தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சமீப காலமாக சீனா, பாகிஸ்தானின் மிகப்பெரிய ராணுவ கூட்டாளியாக உருவெடுத்துள்ளது. பாகிஸ்தான் உலகின் ஐந்தாவது பெரிய ஆயுத இறக்குமதியாளராக உள்ளது. 2019-2023 காலகட்டத்தில் பாகிஸ்தானின் ஆயுத இறக்குமதியில் 82% சீனாவில் இருந்து வந்தது என்று SIPRI அமைப்பின் டேட்டா காட்டுகிறது.

2009-2013 காலகட்டத்தில், பாகிஸ்தானின் ஆயுதங்களில் சுமார் 51% மட்டுமே சீனாவில் இருந்து வந்தது, மீதமுள்ளவை மேற்கத்திய நாடுகளால் வழங்கப்பட்டது.

கடந்த எட்டு ஆண்டுகளில், பாகிஸ்தானின் ராணுவ பட்ஜெட் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளது. போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் ட்ரோன்கள் போன்ற பெரும்பாலான முக்கிய ஆயுதங்கள் சீனாவில் இருந்து வருகின்றன.

சர்வதேச ஆயுத கண்காணிப்பு அமைப்பான SIPRI தகவலின்படி, 2019-2023 காலகட்டத்தில் சீனாவின் அனைத்து ஆயுத ஏற்றுமதியில் சுமார் 61மூ பாகிஸ்தானுக்கு சென்றதுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த நிலையில் தற்போது பாகிஸ்தான் ஒதுக்கியுள்ள 7.37 பில்லியன் டாலரில் பெரும் தொகை சீனாவுக்கு செல்ல வாய்ப்பு அதிகமாக உள்ளது.

அதே சமயம் 2047-ம் ஆண்டுக்குள், இந்திய பொருளாதாரம் 34.7 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைந்துவிடும் என்று PHD வர்த்தகம் மற்றும் தொழில் சபை ஆய்வறிக்கை கூறுகிறது.

இந்தியாவின் தொழில், வர்த்தகம், தொழில்முனைவு ஆகிய துறைகளின் வளர்ச்சியில் கடந்த 118 ஆண்டுகளாகீஉனு வர்த்தகம் மற்றும் தொழில் சபை முக்கிய பங்காற்றி வருகிறது.

அந்த சபை வெளியிட்ட இந்தியப் பொருளாதாரம் குறித்த ஆய்வறிக்கையில், ஹஹவரும் 2047-ம் ஆண்டுக்குள், இந்தியாவில் தனிநபர் வருமானம் 21,000 டாலராக உயர்ந்து, இந்திய பொருளாதாரம் 34.7 டிரில்லியன் டாலரை எட்டிவிடும்.

2047-ம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயம் 12 சதவிகிதம் (கடந்த ஆண்டு 20 சதவிகிதம்) குறைந்தும், தொழிற்துறை 34 சதவிகிதம் (கடந்த ஆண்டு 26 சதவிகிதம்) உயர்ந்தும் காணப்படும்.

2023-ம் நிதியாண்டு முதல் 2047-ம் நிதியாண்டுக்குள் இந்தியாவில் உற்பத்தித் துறை 16-25 சதவிகிதம் வளர்ச்சி அடையும்.

2047-ம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத் துறையின் பங்களிப்பு 54 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது” என்று தெரிவித்துள்ளது.

ஆகவே பாகிஸ்தான் இது போன்ற பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை அற்ற ஒரு நிலையை எப்படி சாமாளிக்க போகிறது என்பதை நாம் பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்பதே உண்மையாகும்..

## மனநலமும் ஆலோசனையும் 36



# அமைதியும் பொறுமையும்

நாம் விரக்தி, துன்பம், ஏமாற்றம், அவமானம், இழப்பு போன்ற உணர்ச்சிகளை சந்திக்கிறோம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அமைதியாக செயற்படுவது மிகவும் முக்கியம் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அவசரமோ ஆவேசமோ அடையாமல் நிதானமாக செயற்படும் இந்த முறைக்குப் பெயர்தான் பொறுமை.

பிரச்சினைகளில் இருந்து வெளிவர....

சங்கடங்களை சரியாக சமாளிக்க...

வெற்றிகளை அடைய...

சாதனைகள் படைக்க...

நோய்களில் இருந்து குணம் பெற...

சோதனைகள் தாண்ட...

எம்மிடம் அவசியமாக இருக்க வேண்டிய மிக முக்கிய பண்புகளில் ஒன்றாக பொறுமை இருக்கிறது.

கடினமான எந்த சூழ்நிலையாயினும் அதில் இருந்து வெளிவர தேவைப்படுவது பொறுமை. குறிப்பாக நெருக்கடிகளின் போது, சண்டை சச்சரவுகளின் போது பொறுமை கட்டாயம் தேவை.

விரக்தி அல்லது துன்பத்தின் போது எங்கள் அமைதியை நிதானத்தை வைத்துக் கொள்ள முடியாவிட்டால், நாங்கள் இலகுவாக தோற்றுப் போய் விடுவோம்.

பொறுமை என்பது எல்லோரிடமும் இருக்க வேண்டிய திறனாகும். அது இல்லாவிட்டால் கட்டாயம் அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பொறுமை இல்லாதவர்களின் நிலை எமக்குத் தெரியும்.

கொஞ்சம் கூட பொறுமை இல்லாதவர்கள்....

உயர் இரத்த அழுத்தம், தீவிர கோபம் மற்றும் கூடுதல் மன அழுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்படுவார்கள் என்று ஆராய்ச்சி கூறுகிறது.

பொறுமை மனச்சோர்வை குறைப்பதுடன் இரக்கம் போன்ற சமூக நடத்தையை ஊக்குவிக்கும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

நாம் அன்றாட வாழ்க்கைக்கு முகம்கொடுக்கும் விதத்திலும்

உறவுகளுடன் நடந்து கொள்ளும் முறையிலும் நாம் எவ்வளவு பொறுமையாக நடந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கு நாம் வாழ்க்கையை ரசிக்கிறோம் என்று அர்த்தம் கொள்ளலாம்.

**பொறுமை..**

- எம்முள் உருவாகும் தூண்டுதல்களை நிர்வகிக்கிறது
- கோபத்தைக் கட்டுப்படுத்துகிறது
- மோசமான தவறுகளைத் தவிர்க்க உதவுகிறது

**பொறுமை....**

- இரக்கத்தை ஊக்குவிக்கிறது
- முன்னோக்கைப் பெற உதவுகிறது
- முதிர்ச்சியை அளவிடுகிறது

**பொறுமை.....**

- தனிப்பட்ட சக்தியை அதிகரிக்கிறது
- மன அழுத்தத்தை குறைக்கிறது
- உறவுகளை மேம்படுத்துகிறது.

மொத்தத்தில் சொல்வதானால் பொறுமையாக இருப்பது வெற்றிகரமான வாழ்க்கைக்கும், அதிக மகிழ்ச்சிக்கும், திறம்பட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் மன அமைதியை உணர்வதற்கும் உதவுகிறது.

ஏமாற்றங்களும் எதிர்பாராத மாற்றங்களும் நிகழும் இந்த நிரந்தரமற்ற உலகில் நிம்மதியாக வாழ வேண்டுமானால் பொறுமை காப்பது கட்டாயமாகும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# நாட்டில் பிறப்பு வீதம் குறைந்து இறப்பு வீதம் அதிகரிப்பு

## - மகப்பேற்று மருத்துவர்கள் தெரிவிப்பு -

**(ஐ.ஏ. காதிர் கான்)**

கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி, இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை 100,000 இற்கும் மேல் குறைவடைந்துள்ளதாக, மகப்பேற்று மருத்துவர்கள் இந்த விடயம் குறித்து அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இறப்பு எண்ணிக்கை 35 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2017ஆம் ஆண்டு இலங்கையில் 325,000 பேர் பிறந்துள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 247,000 ஆக குறைவடைந்துள்ளது.

இதற்கிடையில், 2017 இல் 146,000 ஆக இருந்த இறப்புக்கள், 2023 இல் 181,000 ஆக அதிகரித்திருந்தன.

திருமணமான பல தம்பதிகள் கருவுற்ற காலத்தில் இலங்கையை விட்டும் வெளியேறியமையே, பிறப்புக்கள் குறைவடைவதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதாக, மகப்பேற்று வைத்தியர் பேராசிரியர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதைத் தாமதமாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த ஐந்து ஆண்டுகளில் திருமணம் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை, 12.5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாகவும், மகப்பேற்று வைத்தியர் பேராசிரியர் சனத் லெனரோல் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



கிராமிய மட்டத்தில் நவீன தொழில் நுட்பத்துடனான விவசாயத்துறையை இளைஞர்கள் மத்தியில் மேம்படுத்தும் வகையில் விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அனுராதபுரம் எப்பாவள பகுதியில் இராஜாங்க அமைச்சர் டி.பி .ஹேரத் தலைமையில் நடைபெற்றது.இதன் இராஜாங்க அமைச்சர் விவசாய உபகரணம் வழங்கிய போது பிடித்த படம்.

**(எம்.ரீ. ஆரிப்)**

# சீனன்கோட்டை அல்-ஹுமைஸராவில் பெருநாள் ஒன்றுகூடல்





**(பீ.எம். முக்தார்)**

பேருவளை சீனங்கோட்டை அல் - ஹுமைஸரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களின் ஈதுல் அழ்ஹா ஒன்றுகூடல் (19) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் திரு இப்றாஹிம் காஸிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந் திரளான பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், தலைமைத்துவ பயிற்சி விளையாட்டுக்களும்,பழைய மாணவர்களின் ஒற்றுமையை பலப்படுத்தும் பல்வேறுபட்ட நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





வடமத்திய மாகாண கல்வி நிலையை விருத்தி செய்யும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியைகள் ஆரம்பகால குழந்தை பருவ அபிவிருத்தி டிப்ளோமா பாடத்திட்டத்திற்கு இணைத்துக் கொள்வதற்கான தகுதி கான் தேர்வு மாகாண சபை கேட்போர் கூடத்தில் முன்பள்ளி முகாமையாளர், பணிப்பாளர் நிலந்த ஏக்கநாயக்க தலைமையில் (19) நடைபெற்ற போது பிடித்த படங்கள். **(எம்.ரீ.ஆரிப்)**

# சம்மாந்துறை தேசிய பாடசாலை நுழைவாயில், சுற்றுமதில் நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலத்தின் முகத்தோற்றம் நீண்ட காலமாக பொலிவிழந்தும், மாணவர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் வகையிலும் காணப்பட்டதனை தொடர்ந்து பாடசாலைச் சமூகம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைஸல் காசிம் அவர்களிடம் கோரிக்கையொன்றை முன் வைத்திருந்தது.

இவ்வருடம் (2024) அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரின் முன்மொழிவுக்கு அமைவாக 2 மில்லியன் நிதி குறித்த நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் பாடசாலையின் அதிபர் எம். ரீ.முஹம்மட் ஜனூபர் மற்றும் பொறியியலாளர் ஹனீஃப் மொஹமட் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக மேலதிகமாக 6.5 மில்லியன் நிதியினை நுழைவாயில் மற்றும் சுற்றுமதில் அமைப்பதற்காக ஜனாதிபதியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மிகக் குறுகிய காலத்திற்குள் பாராளுமன்ற உறுப்பினர் பெற்றுக்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன் அடிப்படையில் நுழைவாயில் மற்றும் சுற்றுமதில் நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு (19) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம் மகேந்திரகுமார், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

# முஸ்லிங்களுக்கு அநீதி இடம்பெற்றுள்ள ஜனாஸா எரிப்பை ஆராய ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை உடனடியாக நியமிக்க வேண்டும்

## கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜனாதிபதிக்கு கோரிக்கை!

உடல் உறுப்புகளை தகனம் செய்தல், அடக்கம் செய்தல் மற்றும் தானம் செய்தல் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அறிவித்துள்ள புதிய சட்ட விதிமுறைகள் தொடர்பான ஜனாதிபதியின் யோசனை விவகாரத்தில், கொவிட் தொற்றுக்குள்ளான சடலங்களை தகனம் செய்தமை தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. அந்த உரைகளின் போது முஸ்லிம் ஜனாஸாக்களை தீக்கிரையாக்கிய சம்பவத்தை முஸ்லிம் சமூகம் மறந்துவிட்டு தகனத்தில் ஈடுபட்ட குழுவினரை மன்னிக்க வேண்டும் என்று அந்த உரையிலிருந்து ஜனாதிபதி எதிர்பார்க்கின்றாரா? என ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், தகனத்தில் ஈடுபட்ட குழுவினரை மன்னிக்க வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தால் முஸ்லிம் சமூகம் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடையும். அதற்குக் காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிவினைவாத, தீவிரவாதச் சிந்தனைகள் இல்லாத மனிதாபிமானி என்பதை இந்நாட்டு மனிதாபிமான சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்காரும் அந்த கருத்தை தொனிப்பட தெரிவித்திருந்தார்.

எனவே, கொவிட் தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது தொடர்பாக முடிவெடுத்த குழு தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவும், பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் மனங்களை சாந்தப்படுத்தவும் ஜனாதிபதி ஆணைக்குழுவை அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உடனடியாக நியமிக்க வேண்டும். தகனம் மூலம், அநியாய சம்பவத்தை செய்த குழுவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என முஸ்லிம் சமூகத்தின் சார்பில் இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறேன்.

பூகோள அரசியல் சதிக்காக உடல்களை தகனம் செய்ய முடியும் என்ற முடிவை ஒரு சிறு குழுவினர் எடுத்தார்கள் என்றால் அவர்களின் பின்னால் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறதா என்று கண்டுபிடிப்பது நாட்டுக்கு நல்லது. ஏனெனில் நாடாளுமன்ற



உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்ற கடும்போக்கு சிந்தனை கொண்டவர்கள் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு ஆதரவாக நின்ற போது அதே அரசாங்கத்தின் மற்றுமொரு தரப்பு எதிர்த்தாக பாராளுமன்ற உறுப்பினர்களான வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை சாதாரணமாக கடந்து செல்லவோ அல்லாதது நிராகரிக்கவோ முடியாது. அத்துடன், பேராசிரியர் மெத்திகாவுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிராகரிக்கவும் முடியாது.

முஸ்லிம் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைத்தது என்பதையே அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது. இதுவரை பல்வேறு தரப்பினராலும் வெளியான கருத்துகள் அனைத்தும் உண்மைகளையே உணர்த்துகின்றன. இந்த அநியாயம் முஸ்லிம் சமூகத்தின் இதயங்களை கடுமையாக தாக்கியுள்ளதுடன் நிகழ்காலத்திற்கு மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் பரப்பக்கூடிய ஒரு கருத்தியல் ஆயுதமாக அரசியல் மேடையில் இந்த விடயம் உள்ளது.



கலென்பிந்னுவெவ கல்வி வலயத்திற்குட்பட்ட எஹெட்டுவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் சுற்றுமதில் அமைப்பதற்காக அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் அடிக்கல் நட்டிவைத்த போது பிடித்த படம்.

(எம்.ரீ. ஆரிப்)

# பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த திருகோணமலை ஸாஹிரா மாணவன் சாதனை நாயகன் ஸலாமாவிற்கு புல்மோட்டையில் மகத்தான வரவேற்பு






(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை, இந்தியாவுக்கு இடையிலான பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக்கடந்த இலங்கையின் முதலாவது முஸ்லீம் என்கிற சிறப்புச்சாதனையை தனதாக்கிக் கொண்ட திருகோணமலை ஸாஹிராக் கல்லூரி மாணவன் இளம் சாதனைப்புயல் ஹஸன் ஸலாமாவிற்கு புல்மோட்டையில் மகத்தான வரவேற்பு (19) வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ் வரவேற்பு நிகழ்வில் பெரும் தொகையில் பொது மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.




# விடுமுறையைக் கொண்டாட....

பயாஸா பாஸில்

விடுமுறை என்று வந்தாலே பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம் தான். ஆனால் வீட்டிலுள்ள பெண்களுக்கோ பெரும் திண்டாட்டம்.

பிள்ளைகள் தமது சுதந்திரத்தை மொத்தமாக எடுத்துக் கொள்வார்கள்.. அது நல்லது தான். ஆனால், சிலவேளை.., அது அடுத்தவர்க்கு சங்கடத்தைக் கொடுத்து விடக்கூடாது..

விளையாடும் போது அயலவர் வீட்டு ஜன்னல் கண்ணாடி பலியாகக் கூடாது.. உயிர்ப்பிராணிகளுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது.. இது போன்ற இன்னும் பல...



இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்கவும் வேண்டும்.. பிள்ளைகள் சுதத்ந்திரப் பறவைகளாக பறக்கவும் வேண்டும்.. என்ன செய்யலாம்....??

பல தாய்மார்களது வினா தான் இது..

இதோ சில ஆலோசனைகள்...,,

1. கதைப்புத்தகங்களை வாசிக்க வழிப்படுத்தலாம். குறிப்பிட்ட நேர முறையில் இதனை ஊக்கப்படுத்தலாம். வாசித்து முடித்தால் சின்ன அன்பளிப்பு ஏதேனும் கொடுக்கலாம்.

2. வாருங்கள் செய்வோம் என சேர்ந்து மரங்கள் நடலாம். தோட்ட வேலைகளில் ஈடுபடலாம். வீட்டின் பகுதிகளை அலங்காரம் செய்ய முயற்சிக்கலாம்.

3. கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான விடயங்களை மேற்கொள்ளலாம்.

4. சின்னதாய் ஒரு கூட்டாஞ்சோறு சமைக்கலாம்.

5. அழகான சுற்றுலா ஒன்றை திட்டமிட்டு மேற்கொள்ளலாம்.

இனியென்ன...

விடுமுறை சும்மா கலை கட்டும்...

அனுபவியுங்கள்....!!!

# கோடுகள்

உம்மா.. உம்மா.. ஓடிவாங்க "வாப்பா இந்த ப்லைட்ல(விமானத்து)ல தான் வாராங்க. என்றபடியே வானத்தைப் பார்த்தவாறு கைகளை தட்டித்தட்டி சப்தம் போட்டுக் கொண்டிருந்தான் மூன்றே வயதாகிய மகன் றுஷ்தி.

நாளை கணவன் ரியாஸ் வெளிநாட்டில் இருந்து வருவதாக போன வாரமே கடிதத்தில் எழுதி இருந்தான். இதனல் வீடு ஒரே பரபரப்பாக இருந்தது. சவூதி நாட்டுக்கு வீட்டு சாரதியாக சென்ற ரியாஸ் இரண்டு வருடங்களின் பின் வருவதனால் வானில் பறக்கும் விமானங்களில் எந்த விமானத்தில் தன் வாப்பா வருகின்றாரோ என்று வானத்தையே ஒரு வாரமாய் பார்த்துக் கொண்டிருந்தான் ரியாஸின் செல்ல மகன்.

மனைவி சகிலாவுக்கும் கணவன் ரியாஸிக்கும் கோடிகோடியாய் சம்பாதித்து கொடிகட்டி பறக்கும் ஆசை இருக்கவே இல்லை.வயலே தஞ்சமென பரம்பரைத் தொழிலையே வெளிநாட்டுக்குப் போகும் வரை செய்து வந்தவன்.கஞ்சி குடித்து கலப்பை பிடித்து கால் கடுக்க கஷ்டப்பட்டவன் அவன்.


அவர்கள் தம் திருமண வாழ்வில் பெரிதாய் எதுக்கும் ஆசைப்படவும்மில்லை.

ஒழுகும் ஓலைக்குடிசையை கூரை வீடாக மாற்றியமைக்க வேண்டும்மென்ற ஒரே எண்ணத்தில் தான் கைக்குழந்தையையான றுஷ்தியையும் அன்பு மனைவியையும் விட்டு தொலை தூரம் சென்றான் ரியாஸ்.

கொஞ்சம் கொஞ்சமாக பணம் சம்பாதிக்க அவன் பட்ட துயர்கள் சொல்லவும் மெல்லவும் முடியாத கொடுமைகள்.

வசந்த மாளிகை போல் இருக்கும் அந்த வெளிநாட்டு எஜமானின் வீட்டின் ஓர் மூளையில் அடுப்பங்கரை அளவை விட ஓர் சிறிய அறை.கட்டிலும் மெத்தையும் இல்லாத கட்டாந்தரை.கால் நீட்டக்கூட முடியாத அந்த சிறிய இடத்தில் எலிகளும் மூட்டைப் பூச்சிகளும் மண்டியிட்டு கேட்டு நிற்கின்றன தினமும் ரியாஸ் கூடவே தங்கி விட .

பாவம் அவன் பரிதாபம். வீட்டுச்சாரதி என்பதினால் எஜமானின் குடும்பத்தினர் அழைப்புவிடுக்கும் மறுகனமே அவன் தயாராக இருக்க வேண்டும்.இல்லையென்றால் அவர்கள் பேசும்



வார்த்தைகளாலேயே அவன் மரணித்துப் போய் விடுவான் தினம்.

அல்லாஹ்வை எண்ணியே பொறுமையோடு தொழுகையை நிறைவேற்றி து ஆ வை ஆயுதமாகக் கொண்டு தனக்குப் பாதகமாக் ஆக்கிக்கொள்வான்.

நாட்டுக்குப் போகும் நாள் வந்தது தான் தாமதம் வந்த கடமை நிறைவேறிய சந்தோஷம் அவனை ஆட்கொள்ள தன் அன்பு மனைவி சகிலாவின் கைகளால் ஒரு பிடி சோறு உண்ண வேண்டும் என்ற ஆவல்.மகன் றுஷ்தியை கட்டிப் பிடித்து முத்தமிட வேண்டும் என்ற ஆசை அவனது அனைத்து கஷ்டங்களையும் கரையில் வரைந்த ஓவியமாய் மறையச் செய்தது.

ஆபிஸில் வேலை செய்தவன் போல் கோட்டு சூட்டோடும் பெரிய பெட்டிகளோடும் வீட்டினுள் கால் வைத்தான் ரியாஸ்.

அவனது கஷ்டங்களை அந்த அரேபியா நாட்டு மண்ணில் புதைத்து விட்ட மன மகிழ்வோடு வந்து சேர்ந்தான் சொந்த ஊர்க்கு.

தன் ஆடைகளைக்கூட மாற்றாமல் தன் மகனோடு கொஞ்சிக் குழாவி விளையாடிக் கொண்டிருந்தான் ரியாஸ்.அவனுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

சாப்பாட்டினை நிலத்தினில் எடுத்து வைத்து விட்டு சாப்பிடுவதற்கு அழைப்பதற்காக கணவனின் பக்கமாக சென்றாள் சகிலா.. அவரது கண்களை நேருக்கு நேராக பார்க்கும் போது அவளுக்கு கணத்திருந்த இதயம் இதமாக மாறுவது போல் இருந்தது.

தனது ஆடையினை மாற்றிக் கொண்டிருக்கும் கணவனின் பின்னால் சென்று மெதுவாக் ஆசையோடு அவரது மேல் சட்டையினை கழற்றினால் சகிலா..

ரியாஸின் முதுகினை எதிர்பாராமல் பார்த்த அவள் அப்படியே உரைந்து போனாள்.

வெளித்தோற்றத்தில் அவன் பட்ட துயர்களை மறைத்தாலும் அவனது முதுகினில் உள்ள அழியாத "கோடுகள்"சகிலாவுக்கு ஆயிரம் சோகக் கதைகளை அந்த செக்கனே சொல்லி முடித்தது.

சகிலா அப்படியே ஆசைக் கணவனின் முதுகினில் பல முத்தங்கள் பதித்து கட்டி அனைக்க அதுவே ரியாஸின் ஆறாத வடுக்களாய் இருந்த கோடுகளுக்கு அரும்மருந்தாக அமைந்தது.

– லுதுபியா லுக்மான் –

# கோபா அமெரிக்க கால்பந்துத் தொடரில் புதிய சாதனை படைத்த லயோனல் மெஸ்ஸி



அரபாத் பஹுர்தீன்



ஆர்ஜெண்டினா உதைப்பந்தாட்ட அணியின் தலைவரான லயோனல் மெஸ்ஸி, கோபா அமெரிக்கா உதைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் 35 போட்டிகளில் விளையாடி புதிய சாதனைக்குச் சொந்தக்காரராகியுள்ளார்.

அமெரிக்க கண்ட நாடுகள் மோதுகின்ற உதைப்பந்தாட்டத் தொடர் தற்சமயம் இடம்பெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் ஆர்ஜென்டீனா அணி கனடா அணியை எதிர்த்து விளையாடியிருந்தது. இப் போட்டியில் பங்கேற்ற ஆர்ஜென்டீனா அணியின் தலைவரான லயெனல் மெஸ்ஸ ி இப் புதிய சாதனையினைப் படைத்திருந்தார். இப் போட்டியில் பங்கேற்றமையால் கோபா அமெரிக்க உதைப்பந்தாட்டத் தொடரில் தனி நபராக அதிக போட்டிகளில் பங்கேற்றீரர் என்ற சாதனையை தனதாக்கியுள்ளார்.

இதன் மூலம், 1953ஆம் ஆண்டு சிலி நாட்டு கோல்காப்பாளரான செர்ஜியோ லிவிங்ஸ்டோன் படைத்த (34) சாதனையை லயோனல்மெஸ்ஸ ி முறியடித்துள்ளார்.36 வயதாகும் மெஸ்ஸி, 2007ஆம் ஆண்டு தனது 20ஆவது வயதில் கோபா அமெரிக்கா கால்பந்துப் போட்டியில் முதல்முறை களம் கண்டிருந்தார். அத்துடன் கடந்த 2021ஆம் ஆண்டு மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்டீனா அணி கோபா அமெரிக்கக் கிண்ணத்தை வெற்றி கொண்டிருந்தது.

மேலும் கோபா அமெரிக்கா உதைப்பந்தாட்டப் போட்டிகளில் மெஸ்ஸி இதுவரையில் 13 கோல்களைப் புகுத்தியுள்ளதுடன் 17 கோல்களுக்கு உதவியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நேற்று இடம்பெற்ற போட்டியில் ஆர்ஜென்டீன அணி 2:0 என கனடா அணியை தோற்கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# சகலதுறையில் மிரட்டிய இலங்கை மகளிர் அணி, மே.இ.தீவுகள் மகளிர் அணிக்கு வெள்ளையடிப்புச் செய்தது

சுற்றுலா மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கும் இலங்கை மகளிர் அணிக்கும் இடையிலான 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் சமரி அத்தப்பத்துவின் அசத்தலான துடுப்பாட்டத்தினதும், சச்சினி நிசன்சலாவின் நேர்த்தியான பந்துவீச்சின் உதவியுடனும் 160 ஓட்டங்களால் மிக இலகு வெற்றியைப் பதிவு செய்த இலங்கை மகளிர் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை மகளிர் அணி முதல் இரு போட்டிகளிலும் வெற்றி பெற்று ஒரு போட்டி மீதமிருக்க 2:0 என தொடரை வெற்றி கொண்டிருந்தது. இந்நிலையில் 3ஆதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

இப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவி சமரி அத்தபத்து 91 ஓட்டங்களையும், நிலக்ஷிகா சில்வா 63 ஓட்டங்களையும், அனுஷ்கா சஞ்சீவனி 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கிரிஷ்மா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர் 276 என்ற சவாலான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடக் களம் கண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீராங்கனைகளை சச்சினி நிசன்சலா நிலைக்கவிடாமல் பெவிலியன் அனுப்பி வைக்க மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி 34.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 115 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 160 ஓட்டங்களால் மிகப் பெரிய தோல்விக்கு முகம் கொடுத்தது. துடுப்பாட்டத்தில் செடேன் நேசன் 46 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சச்சினி நிசன்சலா 28 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டியிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக பந்துவீச்சில் மிரட்டிய சச்சினி நிசன்சலாவும், தொடரின் நாயகியாக விஸ்மி குணரட்னவும் தெரிவாகினர். இந்த ெற்றியின் மூலம் இலங்கை மகளிர் அணி மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.

# கேகாலை மாவட்ட கிரிக்கெட் சம்பியனாக மகுடம் சூடியது பாபுல் ஹஸன் தே.பாடசாலை



(எம்.எச்.மாஜிதா)

கேகாலை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில் தோளங்கமுவ டட்ளி சேனாநாயக்க விளையாட்டுப் பாடசாலை அணியை இறுதிப் போட்டியில் வீழ்த்திய வரகாபொலை பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை அணி சம்பியன் மகுடத்தைத் தனதாக்கியதுடன் மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவாகியது.

கடந்த 18ஆம் திகதி வரகாபொலை பாபுல் ஹஸன் தேசிய பாடசாலையில் கேகாலை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கட் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் 16 பாடசாலைகள் கலந்து கொண்டிருந்தது. இதில் முதல் மற்றும் 2ஆது சுற்றிக்களில் வெற்றி பெற்ற பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை அணி காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டியிலும் மிக இலகு வெற்றிகளைப் பதிவு செய்து முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றைய பிரிவில் தான் பங்னேற்ற அத்தனை போட்டியிலும் வெற்றி பெற்ற தோளங்கமுவ டட்ளி சேனாநாயக்க விளையாட்டுப் பாடசாலை அணி இறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகியிருந்தது. இந்நிலையில் மாவட்டத்தின் சம்பியனைத் தீர்மானிக்கும், தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் தோளங்கமுவ டட்ளி சேனாநாயக்க விளையாட்டுப் பாடசாலை அணியை எதிர்கொண்ட வரகாபொலை பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை அணி 2 பந்துகளில் 11 ஓட்டங்களைப் பெற்றார் வெற்றி என்றிருக்க பாபுல் ஹஸன் தேசிய பாடசாலையின் 11ம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் அஸ்லான் 2 பந்துகளுக்கு 2 ஆறு ஓட்டங்களை விளாசிக் கொடுக்க திரில் வெற்றி பெற்ற வரகாபொலை பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை அணி கேகாலை மாவட்டத்தின் கிரிக்கெட் சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

அத்துடன் மாகாண மட்டப் போட்டிகளுக்கும் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த வெற்றி பாபுல் ஹஸன் தேசிய பாடசாலைக்கு ஒரு சாதனை வெற்றியாக அமைந்துள்ளது. அத்துடன் வரகாபொலை பாபுல் ஹஸன் தேசிய பாடசாலையின் கிரிக்கட் அணி வீரர்களை பாபுல் ஹஸன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் காலைக்கூட்டத்தில் உட்சாகமூட்டி பாராட்டுக்களை தெரிவித்தனர்.

# பழைய மாணவர் கிரிக்கெட் தொடர் சம்பியன் மகுடம் சூடியது 2018ஆம் ஆண்டு அணி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நுரைச்சோலை அரபா நகர் கொய்யாவாடி முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் 2007 ஆம் ஆண்டு அணியை 11 ஓட்டங்களால் வீழ்த்திய 2018 ஆம் ஆண்டு அணி நடப்பாண்டின் சம்பியன் மகுடத்தினைத் தனதாக்கிக் கொண்டது.

கொய்யாவாடி முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சபை,பிரஜா பொலீஸ் அமைப்பு, பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர் குழாம் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இச் சுற்றுப் போட்டியின் மொத்தம் 16 வருட அணிகள் பங்கேற்றிருந்தன.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்ற இப் போட்டித் தொடரில் 16 அணிகளும் 4 அணிகள் வீதம் 4 குழுக்கலாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டங்களாக இடம்பெற்றனர். பின்னர் ஒரு குழுவிலிருந்த முதலிடம் பிடிக்கும் 4 அணிகள் அரையிறுதிப் போட்டியில் பங்கேற்று அதிலிருந்து 2 அணிகள் இறுதிப் போட்டியில் பலப் பரீட்சை நடத்தும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய குழு நிலை மற்றும் அரையிறுதிப் போட்டிகளில் இலகு வெற்றிகளைப் பதிவு செய்த 2007 ஆம் வருட அணியும் 2018 ஆம் வருட அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.

இதற்கமைய இறுதிப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற 2018 ஆம் ஆண்டு அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் 60 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த 2007 ஆம் ஆண்டு அணியினர் 5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் பெற்றுக் கொண்டமையால் 2018ஆம் ஆண்டு அணியினர் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் நடப்பாண்டின் சம்பியன் மகுடத்தினைத் தனதாக்கி அசத்தினர்.

# ஏறாவூர் அல் அஸ்ஹரியன் சம்பியனாக 2013 அணியினர்



(உமர் அறபாத்)

ஏறாவூர் மட்/ அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் பொன்விழாவினை முன்னிட்டு பழைய மாணவர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 2024 ம் ஆண்டிற்கான சம்பியனாக 2013 ம் ஆண்டு அணியான சய்லன்ட் சடோவ் சம்பியனாக மகுடம் சூடியது.0

புதனன்று (19) ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மைதானத்தில் பகல் மற்றும் மின்னொளி போட்டியாக பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.எம்.நவாஸ் தலைமையில் இடம்பெற்ற இச்சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டியில்

1999 லீடிங் அஸ்ஹரியன் மற்றும் 2013 ம் ஆண்டு சைலன்ட் சடோவ் ஆகிய இரு அணிகளும் இறுதிச்சமரில் பலப்பரீட்சை நடாத்தியது.

இறுதிப்போட்டியின் போது 2013 சைலன்ட் சடோவ் அணி 1999 ஆண்டு லீடிங் அஸ்ஹரியனை வீழ்த்தி சம்பியனாக மகுடம் சூடியது.

சம்பியனாக தெரிவான அணிக்கான வெற்றிக்கிண்ணத்தினையும் பதக்கங்களையும் ஏறாவூர் நகரசபையின் முன்னாள் தவிசாளர் எம்.எஸ்.நழீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இவ் இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக சைலன்ட் சடோவ் (2013) அணியின் வீரர் இஹ்சான் தெரிவானார்.

இவ் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் சிறந்த ஆட்டநாயகனாக எச்.எம்.ஹஸ்ஸ ான் தெரிவானதுடன் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக முஹமட் அப்துல்லாஹ் தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.